பக்கங்கள்:11 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஆடி 31 புதன்கிழமை 17.08.2022 கதிர் 285

### இனி இது ரகசியம் அல்ல!

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியானவுடனேயே அவருக்கு அரசியல் சரிப்பட்டு வராது, இவர் ஐந்து ஆண்டுகள் பதவியைக் கொண்டிழுப்பது சாத்தியமற்றது என்பது ராஜபக்ஷ குடும்பத்துக்கே தெரிந்து விட்டது என்பது இப்போதைய லேட்டஸ்ட் 2

# சீனக் கப்பலுக்கு இலங்கை மிக உற்சாகமான வரவேற்பு

## எனினும் இந்தியாவின் பாதுகாப்புக் குறித்துக் கரிசனை



கொழும்பு, ஓகஸ்ட் 17

சீனாவின் கண்காணிப்பு கப்பல்களுக்குள் மிக பிரமாண்டமான 'யுவான் வாங் 5' கப்பல் நேற்று ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை வந்தடைந்துள்ளது. அதற்கு இலங்கை மிக உற்சாகமான வரவேற்புக் கொடுத்தது.

எனினும் இக்கப்பலின் வருகையை ஒட்டி இந்தியாவின் பாதுகாப்புக் குறித்துக் கரிசனை தெரிவிக்கப்படுகின்றது. 03

## இந்திய அமைதிப் படையினருக்கு பலாலியில் நேற்று அஞ்சலி நிகழ்வு





(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஓக.17

இந்தியாவின் சுதந்திர தினத்தின் 75 ஆவது ஆண்டை முன்னிட்டு பலாலியில் அமைந்துள்ள – உயிரிழந்த இந்திய இராணுவத்தினரின் நினைவுத தூபியில் – நேற்று முன்தினம் 03

## முக்கியமான பல நாடாளுமன்றக் குழுக்களின் தலைமை எதிரணிக்கு என்பதால் சஜித் திருப்தி

நாடாளுமன்றத்தின் முக்கிய பல குழுக்களின் தலைமைப் பதவிகள் எதிர்க்கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்திக்குக் கிடைப்பெறவுள்ளன எனத் தெரிவிக்கப்படுவதாகவும், இது மிகவும் சாதகமான நிலைமை எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இதன் பிரகாரம், சம்பந்தப்பட்ட அனைத்துக் குழுக்களின் தலைவர் பதவிகளையும் எதிர்க்கட்சிக்கு வழங்குவதற்கு ஏற்பாடு செய்யுமாறு அரசாங்கத்திற்கு முன்மொழிகிறார் எனத் தெரிவித்த எதிர்க்கட்சித் 2



## மீன்பிடி இயந்திரங்கள்,வலைகளுடன் 3 வாடிகள் மன்னாரில் தீயிட்டு எரிப்பு!

### விஷமிகள் கைவரிசையால் மீனவருக்குப் பாதிப்பு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஓக.17

மன்னார் மாவட்டம் பேசாலைப் பகுதியில் கடற்கரையோரத்தில் அமைக்கப்பட்ட மீன் வாடிகள் சில ஞாயிற்றுக்கிழமை இரவு விமிகளால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. 2





## முல்லைத்தீவில் எட்டு மீனவர்கள் 6 படகுகளுடன் மடக்கப்பட்டனர்



முல்லைத்தீவு கடலில் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட 8 மீனவர்கள் ஆறு படகுகளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டக் கடற்பரப்பில் சட்டவிரோதக் கடற்றொழில் நடவடிக்கை அதிகரித்திருப்பதாகவும் இதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவில்லை 03

## காலிமுகத்திடலில் இனிமேல் ஆர்ப்பாட்டம் செய்ய முடியாது

காலி முகத்திடலில் இனி வரும் காலங்களில் ஆர்ப்பாட்டங்களை நடத்த முடியாது என நகர அபிவிருத்தி அதிகார சபை அறிவித்துள்ளது.

அதேவேளை எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட 'ஆர்ப்பாட்ட இடம்' இனி வரும் காலங்களில் அங்கு இருக்காது எனவும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் பிரசாத் ரணவீர தெரிவித்துள்ளார்.

காலிமுகத் திடலை நான்கு மாதங்களுக்கு மேல் போராட்டகாரர்கள் பயன்படுத்தியிருந்தனர். எதிர்காலத்தில் நகர அபிவிருத்தி 2

## எரிபொருள் விலையில் மாற்றமில்லை

எரிபொருள் விலைச் சூத்திரத்தின்படி இம்மாதம் விலையில் எவ்வித மாற்றமும் செய்வதில்லை என அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ஒவ்வொரு மாதமும் முதலாம் மற்றும் 15ஆம் 2

## அவசரகாலச் சட்டத்தை இவ்வாரம் நீக்க முடியும்

### ஜனாதிபதி ரணில் நம்பிக்கை

இலங்கையில் தற்போது அமுலில் உள்ள அவசரகாலச் சட்டத்தை இந்த வார இறுதிக்குள் நீக்க முடியும்.

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நம்பிக்கை வெளியிட்டார்.

நாடு தற்போது 03

## அஸர்பைஜான் எல்லையில் 10 இலங்கையர்கள் கைது



அஸர்பஜான் நாட்டின் எல்லையில் கடந்த 12ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கைகளின் போது பத்து இலங்கை 2

## எரிவாயு கப்பல் வந்தது

மூவாயிரத்து120 மெற்றிக் தொன் திரவமாக்கப்பட்ட பெற்றோலிய வாயுவை ஏற்றிக் கொண்டு கப்பல் ஒன்று நேற்றுக் காலை 03

## கோட்டாவின் தனி விமானத்துக்கு கட்டணம் செலுத்தியவர்கள் யார்?

### அவரா? அரசா? எனக் குழப்பம்!

முன்னாள் ஜனாதிபதியும், அவரின் பின்னர் அவரது மனைவியும் ஜனாதிபதிக்குரிய சிறப்புரிமைகளைப் பெற உரித்துடையவர்கள் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி 2

## இனி இது ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தகவல்.

சில தினங்களுக்கு முன்னர் ராஜபக்ஷ குடும்பத்தில் ஒரு முக்கியஸ்தரோடு பேசிக் கொண்டிருந்தேன். கோட்டாபய பற்றி பேச்சுத் திரும்பியது. அப்போதுதான் அவர்கள் (குடும்பத்தவர்கள்) ஆரம்பம் முதலே எவ்வளவு ஆதங்கத்தோடு இருந் தார்கள் என்பதை உணர முடிந்தது. அந்த ராஜபக்ஷவுடனான முழு உரை யாடலையும் நான் இப்போது பகிரங்கப் படுத்தப் போவதில்லை. பின்னர் தனித் தொடராக எழுதலாம். இப்போது சாம்பி ளுக்கு மட்டும் ஒன்று.

ராஜபக்ஷ குடும்ப ஆட்சியில் கோட் டாபய ராஜபக்ஷ வித்தியாசமானவர். விதி விலக்கானவர். நேரடி அரசியலுக்கு வந்த ராஜபக்ஷக்களில் அவர் மட்டுமே இரா



ணுவ அதிகாரி.

என்னுடன் உரையாடிய அவர்களின் குடும்ப உறுப்பினர் பேச்சுக்களுக்கு இடையே ஒரு கேள்வியைக் கேட்டார்.

“ஓர் இராணுவ அதிகாரிக்கு முதலில் எது முக்கியம்?”

“அவரின் ஆயுதம்” – என்றே நான்.

“நல்லது. அது சரிதான். அடுத்தது என்ன?” – என்று கேள்வி தொடர்ந்தது.

“சீருடை” என்றேன்.

“சீருடை என்றால் கனகச்சிதமாக – கசங்காமல் – ஒழுங்காக இருக்க வேண் டும் அல்லவா? இவரைப் பார்த்தீர்களா?” – என்று கோட்டா குறித்து பிரஸ்தாபிக்கத் தொடங்கினார் அந்த ராஜபக்ஷ.

ராஜபக்ஷ குடும்ப ஆட்சியின் பிதாம கரான மஹிந்த ராஜபக்ஷ போல தேசிய உடையோ, குரக்கன் நிற சால்வைப் பட் டியோ அணியாதவர் கோட்டாபய ராஜ பக்ஷ மட்டுமே. அதைத்தான் இந்த ராஜ பக்ஷ சுட்டிக்காட்டுகின்றாரோ என்று எனக்கு தோன்றியது. ஆனால் அவர் சொல்ல வந்த விடயம் வேறு.

“பாருங்கள் இவர் ஜனாதிபதித் தேர்த லில் வென்று பதவியேற்றதும் அவரை இந்தியப் பிரதமர் மோடி புதுடெல்லிக்கு



அழைத்து கௌரவம் வழங்கினார். அங்கு எப்படிப் போய் இறங்கினார் எங் கள் ஜனாதிபதி என்று பாருங்கள். மோடி யைச் சந்திக்க – அங்கு அளிக்கப்பட்ட முப்படை அணிவகுப்பு மரியாதை ஏற்க – பிரமுகர்களை சந்தித்து கை கொடுக்க – குப்பையான கட்டை சேட் ஒன்றை, ரி சேர்ட் போன்ற கசங்கிய சட்டை ஒன்றை, அணிந்தபடி அவர் நிற்கும் காட்சிகளை இப்போதும் கூட இணையத்தில் நீங்கள் பார்க்கலாம். குறைந்தபட்சம் மோடியை கௌரவிப்பதற்காகவது ஒரு கனவான் உடையை அணிந்து சென்றிருக்கலாம் அல்லவா? ஜனாதிபதியாக நாட்டுக்கு வெளியே முதல் விசிட். அதுவும் பிரதமர் மோடியுடன் சேர்ந்து உலகுக்குக் காட்சி தரப் போகின்றார். தனக்காக ஒரு நல்ல சேர்ட்டையோ, உடையையோ எடுத்துச் செல்வது குறித்துக்கூட கவலைப்படாதவர் எப்படி நல்ல அரசியல்வாதியாக முடி யும்?” – என்று கேட்டார் அவர்.

(வாசகர்கள் கவனத்துக்காக அவர் கூறிய படத்தை இணையத்தில் தேடி இணைத்துள்ளேன்.)

‘ஆள் பாதி; ஆடை பாதி’ என்பார்கள். அரசியலில் அது இன்னும் முக்கியமா னது.

பதவியேற்ற நாள் முதலேயே அரசி யலுக்கு – அதுவும் நாட்டுக்குத் தலைமை வகிக்கும் நிறைவேற்றதிகார ஜனாதிபதி பதவிக்கு – தான் பொருத்தமேயற்றவர் என்ற மாதிரித்தான் அவர் நடந்து கொண் டார். விட்டேத்தியாகச் செயற்பட்டார். அத னால் அவர் மட்டும்ல்லர், அவருடன் சேர்ந்த எல்லோருமே – ராஜபக்ஷ குடும் பமே – அனுபவிக்க வேண்டியதாயிற்று. மக்களின் ஏகோபித்த வரவேற்பை, குறுகிய காலத்தில் ஏகோபித்த எதிர்பாக்கி விட்டாரே என்ற கவலை என்னை சந் தித்த ராஜபக்ஷவுக்கு. அந்த ராஜபக்ஷ இன்னொரு தகவலையும் உறுதியாகச் சொன்னார்.

‘‘மஹிந்த ராஜபக்ஷ இப்போது தளர்ந்து விட்டார். பத்து ஆண்டுகளுக்கு முன்னர் இப்படியாக இருந்தால் நிலைமை வேறு விதமாக இருக்கும். கோட்டாபய பதவியேற்று முதலாம் மாதமே நேரடியாக அவரிடம் போய் ‘தம்பி எல்லாம் போதும். நீ நடையைக் கட்டு. நான் பத்திரமாகப் பார்த்துக்கொள்கிறேன்’ என்று கூறி எல்லாவற்றையும் கையில் எடுத்திருப்பார். இப்போது நிலைமை மாறிவிட்டது. மஹிந்தரும் தளர்ந்து விட் டார்.” – என்றார்.

உண்மைதான்...!

– மின்னல் –

## மீன்பிடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதன்போது 3 மீன்பிடி வாடிகள், 25 குதிரை வலு கொண்ட 3 இயந்திரங்கள் மற்றும் பெறுமதிமிக்க நண்டு, கூடை, கிளைக்கன் மீன் வலைகள், பல பெறுமதி யான பொருள்கள் தீயில் எரிந்து சாம்ப லாகியுள்ளன.

சம்பவ தினத்திற்கு முன் கடந்த 13 ஆம் திகதி தனி நபர் ஒருவருடன் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் காரணமாக அந்நபர் இந்தநாசகாரவேலையைச்செய்துள்ளார் எனப் பாதிக்கப்பட்ட தரப்பினர் பேசாலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

அங்கு உரிய நீதி கிடைக்காத காரணத் தினால் பாதிக்கப்பட்ட தரப்பினர் நேற் றைய தினம் மன்னார் சிரேஷ்ட பொலிஸ் அத்தியாட்சகரிடம் முறையிடுவதற்கு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியா லயத்திற்கு சென்றுள்ளனர்.

கடந்த புரேவிப் புயல் பாதிப்பு, கொரோ னாவால் தொழில் இழப்பு காலங்களில் மிகவும் கஷ்டப்பட்டு தொழில் செய்வதற்கு கடன் அடிப்படையில் பெறப்பட்ட உபகர ணங்கள், பொருள்களை விமிகள் தீயிட் டுக் கொளுத்தி உள்ளார்கள்.

இன்றைய பொருளாதார, எரிபொருள் தட்டுப்பாடு காலத்தில் இந்த மீனவக் குடும்பங்களின் வாழ்வாதாரத்திற்கான நிலை என்ன? பொலிஸாரும், கடல் தொழில் திணைக்கள அதிகாரிகளும் தங்களுக்கு நீதியைப் பெற்று தர வேண் டும் என்று பாதிக்கப்பட்ட மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## முக்கியமான பல ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தலைவர், நாட்டைக் கட்டியெழுப் புவதற் கும், நாட்டுக்குச் சேவை செய்வதற்கும் அமைச்சுப் பதவிகள் அவசியமில்லை எனவும் தெரிவித்தார். மாறாக, நேர்மறை யான பணிகளை மேற்கொள்ள குழுக்க ளைப் படிகளாகப் பயன்படுத்துவதாகவும் தெரிவித்தார்.

இலங்கை தற்போது எதிர்நோக்கி வரும் மிக மோசமான நெருக்கடிகளுக்கு தீர்வு காணும் நோக்கில், நவீன இலங் கையை உருவாக்க, பொதுமக்கள் கோரி நிற்கும் சமூக மாற்றத்திற்காக உடன் பாட்டை எட்டுவதற்கு மறுசீரமைப்புகளுக் கான தேசிய வேலைத்திட்டம் ஸ்தாபிக்கப் பட்டுள்ளதோடு, அதனோடிணைந்ததாக நேற்று முன்தினம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் கொழும் பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவ லகத்தில் கல்விச் சீர்திருத்தங்கள் தொடர் பில் கலந்துரையாடப்பட்டது.

அரசியல்வாதிகள், மக்களுக்கான புத்திஜீவிகள் மன்றம், தேசிய அறிஞர்கள் பேரவை உட்பட கல்வியாளர்கள், பல் கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரை யாளர்கள், தொழில் வல்லுநர்கள் என பல்வேறு தரப்பினர் இதில் கலந்து கொண்டிருந்தனர். இந்தப் பணியுடன் இணைக்கப்பட்டதான மறுசீரமைப்புக ளுக்கான தலைமை செயலகம் எதிர்க் கட்சித் தலைவர் அலுவலகத்தில் திறக் கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## கோட்டாவின் தனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கோட்டாபய ராஜபக்ஷ தற்போது, தாய் லாந்தில் தங்கியுள்ளார்.

அவர் சிங்கப்பூரிலிருந்து பிரத்தியேக ஜெட் விமானம் மூலமே தாய்லாந்தின் பாங்கொக்கிற்குச் சென்றுள்ளார்.

இதற்கான பணம் இலங்கை அரசாங் கத்தினால் செலுத்தப்பட்டுள்ளதாஎன ஊடகவியலாளர் ஒருவர் அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் நேற்றைய ஊடக சந்திப்பில் கேள்வி எழுப்பியிருந் தார்.

அதற்கு பதிலளித்த அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர் தன, ஆம் எனப் பதில் வழங்கியிருந்தார்.

அத்துடன், முன்னாள் ஜனாதிபதிக ளுக்கு சட்டரீதியான சில சலுகைகள் உள் ளன. முன்னாள் ஜனாதிபதியும், அவரின் பின்னர் அவரது மனைவியும் ஜனாதிப திக்குரிய சிறப்புரிமைகளைப் பெற உரித்துடையவர்கள்.

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரே மதாஸவின் மறைவுக்கு பின்னர் அவரது மனைவிக்கு அத்தகைய சிறப்புரிமைகள் தற்போதும் கிடைக்கப் பெறுவதாக அறி கிறேன் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால், அவர் வெளியிட்ட தகவலை அரசின் தகவல் திணைக்களம் நேற்று மாலை மறுத்துள்ளது.

‘முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது தற்போதைய வெளி நாட்டுப் பயணங்களுக்கு அரசாங்கத் தின் நிதியைப் பயன்படுத்தவில்லை என அரசாங்க தகவல் திணைக்களம் தெரி வித்துள்ளது.

அவர் தனது தனிப்பட்ட நிதியில் இருந்து குறித்த பயணங்களுக்கான செலவுகளை மேற்கொள்கிறார் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## காலிமுகத்திடலில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதிகார சபையின் அனுமதியுடன் மட் டுமே பொது வைபவங்களுக்கு பயன் படுத்த முடியும் என அதிகார சபை தெரி வித்துள்ளது.

## அஸர்பைஜான் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யர்கள் பேர் கைதுசெய்யப்பட்டனர்.

இவர்கள் தற்போது தடுத்து வைக் கப்பட்டுள்ளனர் என அஜர்பைஜான் நாட் டின் எல்லை சேவை தெரிவித்துள்ளது.

முதற்கட்ட விசாரணைகளின்படி அவர்கள் கடந்த ஜூலை 25 மற்றும் 29 ஆகிய திகதிகளில் சுற்றுலாப் பயணிக ளாக நாட்டின் எல்லைக்கு அதிகாரப்பூர் வமாகச் சென்றுள்ளனர்.

பின்னர், அலிர்சா என்ற ஈரானிய குடி மகனுடன் ஐரோப்பிய நாடு ஒன்றுக்குள் செல்வதற்காக அஸர்பைஜான் எல் லையை கடந்து ஈரானுக்குள் பிரவேசிக்க முயன்றுள்ளனர்.

இந்தநிலையில் சட்டவிரோத இடம் பெயர்வுகளின் ஊடுருவலைக் கண்டறி யும் வகையில் அவர்கள் மீது விசார ணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

## எரிபொருள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

திகதிகளில் எரிபொருள் விலை திருத்தம் மேற்கொள்ளப்படும் என மின்சக்தி மற் றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜே சேகர குறிப்பிட்டிருந்தார்.

சர்வதேச சந்தையில் எரிபொருள் விலை கூடினால் இங்கு எரிபொருள் விலை கூடும் , விலை குறைந்தால் இங் கும் குறைக்கப்படும். அதுவே எரிபொருள் சூத்திரத்தின் அடிப்படை என முன்னர் அமைச்சர் விளக்கமளித்திருந்தார்.


## இது ஒரு வர்த்தக விளம்பரம்

அரசியல் பொருளாதார சீர்கேடுகளால் நாடு நலிவுற்றிருக்கிறது. இந்நிலை யில் இளைஞர்கள் அரச தொழிலை எதிர்பார்க்க கூடாது. உள் நாட்டிலோ வெளி நாட்டிலோ தொழில் தேட வேண்டும் அல்லது சுய தொழில் ஆரம்பிக்க வேண் டும். இரண்டுக்கும் தொழில் தகமையை வளர்த்துக்கொள்ள வேண்டியது அவசியம். கல்லூரியும் பல்கலைக்கழகமும் அடிப்படை கல்வியை தான் தரு வார்கள். தொழில் கல்வி, தொழில் பயிற்ச்சி, இவை தொடர்பான வேலை அனுப வம் சேரும்போது தான் தொழில் தகமை வளரும்.

தொழில் கல்வி. தொழில் பயிற்சி, பிரதானமாக வேலை அனுபவம் பெற நம் நாட்டில் வசதிகளில்லை. இந்தியாவில் இப்பயிற்சிக்கான வாய்ப்புகள் நிறைய உண்டு. இந்தியாவில் பயிற்சி பெற்ற ஒட்டுனர்கள் (welders) மற்றும் விருந் தோம்பல் துறை ஊழியர்கள் (Hospitality workers) உலகின் பல நாடு களில் வேலை செய்கிறார்கள். அவர்களைப் பயிற்றுவிக்கும் நிறுவனங்களே வாய்ப் புகளைப் பெற்றுத்தருகிறார்கள். இவை பற்றி மேலதிக விவரங்கள் அறிய janananayakam.associates@gmail.com என்னும் மின் அஞ்சல் விலாசத்திற்கு குறுகிய சுய விவரக்கோவையுடன் (brief bio data) தொடர்பு கொள்ளவும்.



காலைக்கதிர் Kalaikkathir

## நாயைக் கொடூரமாக கொலைசெய்தவருக்கு 29 வரை விளக்கமறியல்

யாழ்., புங்குடுதீவில் நாய் ஒன்றைக் கைக்கோடரியால் வெட்டிக் கொலை செய்த பிரதான சந்தேகநபர் தலைமறைவாகியிருந்த நிலையில் ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்தில் சரண்டைந்தார்.

அவர் ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு எதிர்வரும் 29ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

நாய் ஒன்றை கைக்கோடரியால் வெட்டிக் கொடூரமாகக் கொலை செய்யும் காட்சி சமூக ஊடகங்களில் வெளியாகியது.

இந்தச் சம்பவம் புங்குடுதீவு, 9ஆம் வட்டாரத்தில் இடம்பெற்றது என விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டது.

புங்குடுதீவு, 9ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த 21 மற்றும் 35 வயதுடைய இருவர் இந்த மாத ஆரம்பத்தில் ஊர்காவற்றுறை பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டனர்.

நாயை வெட்டிக் கொல்லப் பயன்படுத்திய கைக்கோடரி மற்றும் அதனைக் காணொலி எடுத்த அலைபேசி என்பனவும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

போதைப்பொருளுக்கு அடிமையாகியதால் ஊரில் திருட்டுக்களில் ஈடுபட்டோம். எம்மைக் கண்டவுடன் நாய் குலைத்துக் காட்டிக்கொடுத்துவிடும். இதனால் அங்கு இடம்பெறும் திருட்டுக்களுடன் எமக்குத் தொடர்பு உண்டு என பொலிஸார் விசாரணைக்கு அழைப்பார்கள். அதனால்தான் அந்த நாயை வெட்டிக் கொலை செய்தோம். கைக்கோடரியால் வெட்டிக் கொலை செய்தவர் அன்றைய தினம் போதையில் இருந்தார். சில நாள்களுக்கு முன்பாகவே நாயைக் கொலை செய்துவிட்டோம். அதன் காணொலி சகோதரனின் அலைபேசியில் இருந்தது. அந்தக் காணொலி தவறுதலாக ரிக்ரொக்கில் பதிவேற்றப்பட்டுவிட்டது – என்று காணொலியைப் பதிவெடுத்தவர் வாக்குமூலம் வழங்கியிருந்தார்.

சந்தேகநபர்களைச் சட்ட மருத்துவரின் முன் முற்படுத்தி அறிக்கை பெற்ற பின் விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்நிலையில், பிரதான சந்தேகநபர் கிளிநொச்சியில் தலைமறைவாகியிருக்கின்றார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பிரதான சந்தேகநபர் நேற்றுமுன்தினம் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தார். அவர் மிருகவதைச் சட்டத்தின் கீழ் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது பிணை வழங்க மறுத்து மன்று 14 நாள்களுக்குச் சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டது.

இந்த கொடூரச் சம்பவம் சமூக மட்டத்தில் கடும் எதிர்ப்பை ஏற்படுத்திய நிலையில் யாழ்ப்பாணம் மாவட்ட முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரியந்த லியனகேயின் உத்தரவில் நாயைக் கொலைசெய்தவர் மற்றும் உடந்தையாக இருந்தோர் மீது மிருக வதைச் சட்டத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

## பிரிட்டன் பெண்ணின் 'ரிட்' மனு நிராகரிப்பு

தம்மை நாடு கடத்தும் உத்தரவை இரத்துச் செய்ய உத்தரவிடக் கோரி பிரிட்டன் பெண் கெய்லி பிரேசர் தாக்கல் செய்த ரிட் மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று நிராகரித்துள்ளது.

மருத்துவ விசாவில் இலங்கை வந்த நிலையில், காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டத்துக்கு ஆதரவளித்து காணொலி வெளியிட்ட கெய்லி பிரேசர் என்ற பிரிட்டன் பெண்ணின் விசாவை குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம் இரத்துச் செய்ததுடன், இம்மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் நாட்டை விட்டு வெளியேற உத்தரவிட்டது.

எவ்வாறாயினும், தம்மை நாடு கடத்துவதற்கு எதிரான தீர்மானத்தை இரத்துச் செய்ய உத்தரவிடுமாறு கோரி இந்த மனுவை குறித்த பிரிட்டன் பெண் தாக்கல் செய்திருந்தார்.

# இலங்கையில் ஆட்சிக் கவிழ்ப்பு; சீனா துணைபோகவே இல்லை

## போற்றிப் புகழ்ந்தார் விமல்

இலங்கையில் தொண்டு நிறுவனங்களை நிறுவி ஆட்சிக் கவிழ்ப்புக்களை மேற்கொள்ள சீனா ஒருபோதும் துணைபோகவில்லை என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான விமல் வீரவன்ச எம்.பி. தெரிவித்தார்.

அம்பாந்தோட்டைத் துறைமுகத்துக்கு நேற்று காலை வருகை தந்துள்ள சீன இராணுவத்தின் 'யுவான் வாங் 5' கப்பலுக்கு உத்தியோகபூர்வவரவேற்பளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சீனா எம்முடன் நீண்டகாலமாக நட்புறவைக் கொண்டுள்ளது. நாம் பொருளாதார ரீதியில் விழுந்துள்ள சந்தர்ப்பங்களிலும் எமக்குக் கைகொடுக்கும் நாடுகளில் சீனாவும் ஒன்றாகும்.

நாம் எதனைச் செய்ய வேண்டும் என்று எமக்கு ஒருபோதும் சீனா அழுத்தங்களைப் பிரயோகிக்கவில்லை. இலங்கையில் தொண்டு நிறுவனங்களை நிறுவி ஆட்சிக் கவிழ்ப்புக்களை மேற்கொள்ள சீனா ஒருபோதும் துணை போகவில்லை.

இலங்கை தற்போது பொருளாதார ரீதியில் நெருக்கடிகளை கொண்டுள்ளது. இந்த நிலைமையில் கடன்களை விட முதலீடுகளையே இலங்கை எதிர்பார்க்கின்றது.

இந்தச் சந்தர்ப்பத்தில் கடன்களைவிட முதலீடுகளால் சீனா எமக்கு அதிகம் உதவும் என்று நாம் எதிர்பார்க்கின்றோம் – என்றார்.

---

### சீனக் கப்பலுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

222 மீட்டர் நீளமும், 26 மீட்டர் அகலமும் உடைய இந்த கண்காணிப்பு கப்பலில் அதி நவீன விண்வெளி ஆய்வுக் கருவிகள் உள்ளன எனவும், விண்ணில் பறக்கும் செயற்கை கோள்களைக்கூட இந்த கண்காணிப்பு கப்பலால் ஆய்வு செய்ய முடியும் என்பதால் ஆரம்பத்தில் இருந்தே கப்பலின் வருகைக்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டு வந்தது.

இந்தக் கப்பல் 750 கி.மீ. சுற்றளவில் இருக்கும் அத்தனை விடயங்களையும் துல்லியமாக ஆய்வு செய்யும் திறன் கொண்டிருப்பதாகவும் தமிழகத்தில் இருந்து இலங்கையின் அம்பாந்தோட்டை துறைமுகம் 150 கி.மீ தொலைவில் இருப்பதால் கப்பலின் வருகை தொடர்பில் மீள்பரிசீலனை செய்யுமாறு இந்தியத் தரப்பில் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டு வந்தது.

இருப்பினும், சீனாவின் விடாப்பிடி காரணமாக அறிவியல் ஆய்வுகளில் ஈடுபடக்கூடாது என்ற நிபந்தனையின் பேரிலும், அம்பாந்தோட்டை துறைமுகத்தை 99 ஆண்டுகளுக்கு சீனா குத்தகைக்கு எடுத்திருக்கின்றமையால் அந்த துறைமுகத்துக்குத்தான் வரப்போவதாக சீனா இராணுவம் அறிவித்தமையாலும் இலங்கை அரசு 'யுவான் வாங் 5' கப்பலுக்கு அனுமதியளித்து.

இதன்படி நேற்றுக் காலை 8.20 மணிக்கு யுவான் வாங் – 5 உளவு கப்பல் அம்பாந்தோட்டை துறைமுகத்தை வந்தடைந்தது. இன்று முதல் 22ம் திகதி வரை 7 நாள்களுக்கு கப்பல் அம்பாந்தோட்டை துறைமுகத்தில் நங்கூரம் இடப்பட்டு நிலை கொண்டிருக்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எரிபொருள் நிரப்புவதற்கு எனக் காரணம் கூறியிருப்பினும், இந்த கண்காணிப்புகப்பல் இலங்கைதுறைமுகத்துக்கு வந்தால் தென் இந்தியப் பாதுகாப்புக்கு மிகப்பெரிய அச்சுறுத்தல் ஏற்படும் என்று இந்திய இராணுவம் தெரிவித்திருந்த நிலையில் அமெரிக்காவும் இதே கருத்தை வெளியிட்டது.

இதனையொட்டி இலங்கை – சீனா பாதுகாப்பு அதிகாரிகளுக்கிடையே பேச்சுகள் இடம்பெற்றன. இருப்பினும் அதில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் மற்றும் எடுக்கப்பட்ட முடிவுகள் தொடர்பில் இரு நாடுகளும் எதுவித கருத்தும் தெரிவிக்காமையினால் இக்கண்காணிப்பு கப்பலின் நடவடிக்கைகள் தொடர்ந்து மர்மமாகவே இருக்கின்றன.

அதனால் இந்த கப்பலால் தென் இந்திய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதை மறுக்க முடியாது என்று இராணுவ நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

கப்பலின் வருகைதவிர்க்கமுடியாமல் உள்ளது எனசிறிலங்கா அரசு தெரிவித்திருந்தாலும் நேற்று கப்பலுக்கு சீன தூதரகமும், சிறிலங்கா அதிகாரிகளும் உற்சாக வரவேற்பு கொடுத்தமை அமெரிக்க இந்திய தரப்பின் அச்சத்தை மேலும் வலுவாக்கியுள்ளது.

இதன் காரணமாக கப்பல் துறைமுகத்தில் இருக்கும் 7 நாள்களும் அந்தக் கப்பலின் செயல்பாடுகளை உன்னிப்பாகக் கவனிக்க இந்தியா ஏற்பாடு செய்திருப்பதாக இராணுவ வட்டாரங்கள் தகவல் தெரிவிக்கின்றன.

இந்தியக் கண்காணிப்பின் ஒரு பகுதியாகவே நேற்று முந்தினம் இலங்கைக்கு இந்திய அரசு அவசர் அவசரமாக வழங்கிய கடல் சார் உளவு விமானமும் காணப்படுகின்றது என எதிர்வுகூறப்படுகிறன்றது.

சீனாவிடம் இராணுவம் மற்றும் விண்வெளி ஆய்வுக்காக 7 உளவுக் கப்பல்கள் உள்ளன என்றும் அதில் 'யுவான் வாங் – 5' என்ற கண்காணிப்பு கப்பலே அதி செயல்திறன் வாய்ந்தது எனவும் இதன் காரணமாக தென் இந்தியாவிற்கு பாரிய பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்படும் எனவும் அமெரிக்கா எச்சரித்துள்ளது.

அதிநவீன கருவிகள் பொருத்தப்பட்ட இந்தக் கப்பல் மூலம் தென் இந்தியாவில் உள்ள 6 கடற்படை தளங்களை இந்த உளவு கப்பலால் படம் பிடிக்க முடியும் எனவும் அங்கு என்ன வசதிகள் உள்ளன என்பதையும் தெரிந்து கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், தமிழகத்தில் கல்பாக்கம், கூடங்குளம் ஆகிய 2 இடங்களிலும் சக்தி வாய்ந்த அணுமின் நிலையங்கள் உள்ளன. இந்த அணுமின் நிலையங்களையும் உளவு கப்பலால் பார்க்க முடியும் எனவும் சென்னைக்கு அருகே இருக்கும் ஸ்ரீ ஹரிகோட்டாவில் உள்ள இஸ்ரோ விண்வெளி ஆய்வு நிறுவனத்தின் பணிகளையும் அந்த கப்பலால் ஆய்வு செய்ய முடியும் எனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

இந்த அச்சுறுத்தல்கள் தவிர விசாகப்பட்டினம் மற்றும் கொச்சியில் உள்ள கடற்படை தளங்களையும் கப்பல் துல்லியமாக தெரிந்து கொள்ள வாய்ப்பு இருப்பதாகவும் இந்த உளவு தகவல்கள் உடனுக்குடன் சீன இராணுவத்துக்கு அனுப்பப்படும் அபாயம் இருப்பதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன.

சுமார் 2 ஆயிரம் பேர் பணிபுரிந்து வரும் யுவான் வாங் –5 கண்காணிப்பு கப்பல் துறைமுகத்தில் பணியாளர் மாற்றம் செய்யும் வாய்ப்பு இருப்பதாகவும் எதிர்வு கூறப்படுகின்றது. இதனால் அவ்வாறான நடவடிக்கைகளை அம்பாந்தோட்டை துறைமுகத்தில் வைத்து மேற்கொள்ளக்கூடாது என்று இலங்கை நிபந்தனை விதித்திருக்கிறது.

எவ்வாறாயினும் புவிசார் அரசியல் போட்டியில் இலங்கை அரசிற்கு புதிய பிரச்சினை தோற்றம் பெற்றுள்ளது என்பதை மறுக்க முடியாது என அரசியல் அவதானிகள் கருத்து தெரிவிக்கின்றனர்.

(நன்றி: ஐ.பி.ஸி. தமிழ்)

### எரிவாயு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அம்பாந்தோட்டை துறைமுகத்தை வந்தடைந்ததாக லாப் காஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

எரிவாயு இருப்புக்கள் தற்போது லாஃப்ஸ் டெர்மினல் வசதிக்கு மாற்றம் செய்யப்படுகின்றன. மேலும் நிரப்புதல் நடவடிக்கைகள் தொடங்கியவுடன் உள்ளூர் நுகர்வுக்கு அது வெளியிடப்படும் என்று நிறுவனம் தெரிவித்துள்ளது.

---

### அவசரகாலச் சட்டத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

ஸ்திரமான நிலையில் இருக்கின்றது எனச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அவசரகாலச் சட்டத்தை நீடிக்க வேண்டிய தேவை இல்லை எனவும் குறிப்பிட்டார்.

கொழும்பு, சினமன் லேக்சைட் ஹோட்டலில் நேற்று நடைபெற்ற 'தொழில்சார் வல்லுநர் சங்கங்களின் மாநாடு – 2022' விருது வழங்கும் நிகழ்வில் உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

தற்போது நாட்டைக் கட்டியெழுப்பப் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதற்கு அனைத்துத் தரப்பினரின் ஒத்துழைப்பும் தேவை – என்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, நீதி அமைச்சர் கலாநிதி விஜயதாஸ ராஜபக்ஷ, நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன, முன்னாள் அமைச்சர் ஜோன் அமரதுங்க, தொழில்சார் வல்லுநர் சங்கங்கள் சம்மேளனத்தின் தலைவர் துலித பெரேரா, தலைமைச் செயலாளர் உபாலி ஜயவர்தன உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

---

### முல்லைத்தீவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

எனவும் மீனவர்கள்

தொடர்ச்சியாகக் குற்றச்சாட்டுக்கள் முன்வைத்து வரும் நிலையில் அதனைக் கட்டுப்படுத்தும் விதத்தில் கொழும்பில் இருந்து வருகை தந்த விசேட அணியும் முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத்திணைக்கள அதிகாரிகளும் கடற்படையும் இணைந்து நேற்று முன்தினம் இரவு தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன்போது முல்லைத்தீவு கடலில் தடைசெய்யப்பட்ட கடற்றொழில் நடவடிக்கையில் ஒன்றான கடலுக்குள் ஒளி பாய்ச்சி மீன்பிடித்த குற்றச்சாட்டில் கொக்கிளாய் கடற்பரப்பில் மூன்று படகுகளும், மாத்தளன் கடற்பரப்பில் ஒரு படகும், வலைஞர்மடம் கடற்பகுதியில் இரண்டு படகுகளும் என மொத்தமாக 6 படகுகளுடன் 8 மீனவர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள்.

கைது செய்யப்பட்ட நபர்களையும் சான்று பொருள்களையும் முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தும் நடவடிக்கையில் கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள அதிகாரிகள் ஈடுபட்டிருந்தனர்.

---

### இந்திய அமைதிப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

நினைவு கூரல் இடம்பெற்றது.

1987 ஆம் ஆண்டிலிருந்து 1990 வரையான காலப்பகுதிகளில் இலங்கையில் விடுதலைப்புலிகளிற்கு எதிராக இடம்பெற்ற 'ஒப்பரேசன் பவன்' மற்றும் அனைத்து இராணுவ நடவடிக்கைகளிலும் உயிரிழந்த இந்திய அமைதிப்படையின் இராணுவ வீரர்கள் நினைவாக அமைக்கப்பட்ட தூபியில் மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

இதன்போது யாழ்ப்பாணத்திற்கான இந்திய துணைத்தூதுவர் ஸ்ரீ ராகேஷ் நட்ராஜ் மற்றும் யாழ். பாதுகாப்புப் படைகளின் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் சந்தன ஜயசுந்தர உள்ளிட்டோர் விருந்தினர்களாக கலந்துகொண்டு உயிரிழந்த இந்திய வீரர்களுக்கு மலரஞ்சலி செலுத்தினர்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## பேரினவாதத்தின் முகம்

**குருடர்கள் யானையைப் பார்த்த கதையாக பௌத்த, சிங்களப் பேரினவாதிகள் விடயங்களை விமர்சித்திருக்கின்றார்கள்.**

**புலம்பெயர் தமிழர் தரப்புகள் மீதான தடையை நீக்கும் ரணில் அரசின் முடிவை ஒட்டித் தங்கள் உண்மைச் சொரூபத்தை அம்பலப்படுத்தத் தொடங்கியிருக்கின்றார்கள் பேரினவாதிகள்.**

**தத்தமது பேரினவாதப் பார்வையில் இந்த நடவடிக்கையைக் குறை சொல்லி, பழி கூறும் பேரினவாதிகள், ரணில் அரசின் இந்த நடவடிக்கைக்குப் பின்னால் புதைந்து கிடக்கும் அர்த்தங்கள் என்று தத்தமது கற்பிதங்களை முன்வைத்து வருகின்றனர். அவை குருடர்கள் யானையைத் தொட்டுப் பார்த்துவிட்டு, யானை குறித்து வியாக்கியானம் செய்யும் கதைகளாகவே இருக்கின்றன.**

**தேசியப் பாதுகாப்புக் குறித்தும் கவனம் செலுத்தாமல் ரணில் தலைமையிலான அரசு பொறுப்பின்றி எடுத்த நடவடிக்கை இது என்று முன்னாள் இராணுவத் தளபதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா கூறுகின்றார். சர்வதேசத்தை ஏமாற்றுவதற்காகவும், ஜெனிவா மாநாட்டைச் சமாளிப்பதற்காகவும், நாட்டின் பாதுகாப்பை ஆபத்தில் மாட்டி, ரணில் முன்னெடுக்கும் இந்த நாடகத்தில் சர்வதேசமும் ஏமாறப் போகின்றது என்கிறார் சரத் பொன்சேகா.**

**இதே போன்ற கருத்தை தேசிய அமைப்புகளின் சம்மேளனங்களில் சார்பில் குணதாஸ அமரசேகராவும் வெளியிட்டிருக்கின்றார்.**

**சமீபத்தில் ஜனாதிபதியைச் சந்தித்த பின்னர் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன் தங்களுடைய வேண்டுகோள்கள் தொடர்பில் பல வாக்குறுதிகள் கிடைத்துள்ளன எனத் தெரிவித்திருந்தார். தடை நீக்கமும் அத்தகைய வாக்குறுதிகளில் ஒன்றா என்று அவர் கேள்வி எழுப்பியிருக்கின்றார்.**

**"தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று குறிப்பிட்டே இந்த அமைப்புகள் மீது தடை விதிக்கப்பட்டிருந்தது. இப்போது அந்த ஆபத்துகள், அச்சுறுத்தல்கள் நீங்கி விட்டனவா?" – என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ கேள்வி எழுப்பியிருக்கின்றார்.**

**இவ்விவகாரம் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சு உண்மை நிலையைத் தெளிவுபடுத்த வேண்டும் என்றும் அவர் கோரியிருக்கின்றார்.**

**புலம்பெயர் அமைப்புகள் மீதான தடை நீக்கத்துக்கான – தெளிவான – விவரமான – காரணங்களை ரணில் அரசு இன்னும் வெளிப்படையாகப் பேசவில்லை. பாதுகாப்பு அமைச்சு இந்த அமைப்புகள் தொடர்பில் அண்மைக் காலங்களில் மேற்கொள்ளப்பட்ட தீவிர கண்காணிப்புச் செயற்பாடுகளின் பின்னரே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது என்ற அமைச்சரவைப் பேச்சாளரின் கருத்துடன் இவ்விடயத்தில் அரசு தன் நிலைப்பாட்டை அமுக்கி வாசிக்கின்றது. இது விடயத்தில் தன்னுடைய சீட்டுக்களை நெஞ்சுக்கு நெருக்கமாகப் பேணி, பிற தரப்புகளுக்குக் காட்டாமல் விளையாடவே ரணில் அரசு முயல்கின்றது என்பது தெளிவு.**

**இவ்விவகாரத்தில் சிங்களத்தின் கருத்துத் தெறிப்பு ஒரு விடயத்தைத் தெளிவுபடுத்துகின்றது. இலங்கைத் தீவில் தமிழருக்கு நீதி, நியாயமான தீர்வு ஒன்று கிட்டுவதை பேரினவாதம் எக்காரணம் கொண்டும் அனுமதிக்க மாட்டாது என்பதே அது.**

# புலம்பெயர் அமைப்புகளை பலவீனப்படுத்தவே பாரபட்சமான தடை நீக்கும் அறிவிப்புக்கள்!

## முன்னாள் மாகாணசபை உறுப்பினர் சபா குகதாஸ் கருத்து



ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் புலம்பெயர் தமிழர் அமைப்புக்களைப் பலவீனப்படுத்தும் நோக்கிலே பாரபட்சமான முறையில் தடைநீக்கும் வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளது என வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

தடை நீக்கம் என்பது புலம்பெயர் தமிழர் அமைப்புக்களுக்குப் புதியவை அல்ல. அத்துடன் இந்தத் தடை நீக்கம் நிரந்தரமானதும் அல்ல. இதனை அத்தனை தமிழர் புலம்பெயர் அமைப்புக்களும் புரிந்துக்கொள்ள வேண்டும்.

ஈழத் தமிழர்களுக்கு நிரந்தரத் தீர்வு கிடைத்தால் மட்டுமே புலம்பெயர் தமிழர் அமைப்புக்களுக்கும் நிரந்தரத் தடை நீக்கம் கிடைக்கும். அதுவரை மாறி மாறி வரும் சிங்கள ஆட்சியாளர்கள் தங்கள் அரசியல் நலன்களுக்காகத் தடை போடுவார்கள் தடை நீக்குவார்கள்.

இலங்கை அரசின் நிகழ்ச்சி நிரல், சர்வதேச அரங்கில் தங்களை நம்ப வைப்பதற்கான செயற்பாடுகளை மேற்கொள்ளுதலாகும். அதனடிப்படையில் தான் உள் நாட்டுக்குள் பல பிரச்சினைகள் தீர்க்கக் கூடியனவாக இருக்கும் போது அவற்றுள் கரிசனை செலுத்தாது புலம்பெயர் அமைப்புக்களைத் தடை நீக்க முன் வந்துள்ளமை ஆகும்.

தடை நீக்கத்தின் பின்னர் உள் நாட்டில் சிங்கள ஆட்சியாளர் பலரின் இனவாத கோரமான மன வெளிப்பாடுகள் வெளிக்கிளம்பி உள்ளன. அவை இனக் குரோத சிந்தனையில் அவர்கள் தொடர்ந்தும் இருக்கின்றமையை உறுதி செய்கின்றது.

புலம்பெயர் தமிழர் அமைப்புக்கள் ஒற்றுமையாக இருக்கும் வரை தான் பேரப் பலத்தை உறுதி செய்ய முடியும். இல்லாவிட்டால் இலங்கை ஆட்சியாளர்கள் பலவீனப்படுத்தி பிரித்தாளும் தந்திரத்தின் மூலம் பேரப் பலத்தை அழித்து விடுவார்கள்.

கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் நடந்ததை நல்ல பாடமாக எடுத்துக்கொள்ள வேண்டும். இதனை மறந்தால் சர்வதேச நீதிப் பொறிமுறை, கால நீடிப்பு என்ற கட்டமைப்பில் தமிழ் மக்களுக்கு நீர்த்துப் போகும் அபாயத்தையே உருவாக்கும்.

பொருளாதார மீட்சியால் மட்டும் இலங்கையை நிரந்தர அமைதியான நாடாக மாற்றிவிட முடியாது. இனப்பிரச்சினைக்கான நிரந்தரத்தீர்வே நிரந்தர அமைதிக்கு வழிவகுக்கும் என்ற உண்மையை இராஜதந்திரமாகக் கொண்டு காய்நகர்த்த ஒற்றுமையாக முன்னெடுக்க புலம்பெயர் தமிழர் அமைப்புக்கள் தயாராக வேண்டும். – எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மீதான தடை நீக்கம் பாதுகாப்பு அமைச்சிடம் விளக்கம் கோருகிறார் விமல்!



புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மீதான தடை நீக்கப்பட்டமைக்கான தெளிவான விளக்கத்தைப் பாதுகாப்பு அமைச்சு கூற வேண்டும்எனதேசியசுதந்திரமுன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ வலியுறுத்தியுள்ளார்.

6 புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மீதும், தனிநபர்கள் சிலர் மீதும் விதிக்கப்பட்டிருந்த தடை அரசால் நீக்கப்பட்டுள்ளது.

அது தொடர்பாக ஊடகங்களிடம் கருத்துத் தெரிவித்தபோதே விமல் வீரவன்ஸ இந்த விடயத்தை வலியுறுத்தியுள்ளார்.

மேலும் தெரிவிக்கையில் –

6 புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மீதான தடை எதற்காக நீக்கப்பட்டது. தடை விதிக்கப்பட்டமைக்குக் காரணங்கள் இருந்தன அல்லவா. தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தல் என்று கூறியே இந்த 6 அமைப்புக்களுக்கும் தடை விதிக்கப்பட்டிருந்தது.

அதனால் தடை நீக்கப்பட்டமைக்கான தெளிவான விளக்கத்தைப் பாதுகாப்பு அமைச்சு கூற வேண்டும். இப்போது அந்தத் தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தல் தணிந்து விட்டதா? அப்படி இல்லாவிட்டால் தடை நீக்கப்பட்டமைக்கு உண்மையான காரணம் என்ன?

அதை அறிந்துகொள்வதற்கான உரிமை நாட்டு மக்களுக்கு உண்டு. என்ன காரணத்துக்காக 6 புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மற்றும் முக்கிய தனிநபர்கள் மீதான தடை நீக்கப்பட்டது என்பதை அரசாங்கம் தெளிவுபடுத்த வேண்டும்.

பாதுகாப்பு அமைச்சு தெளிவான அறிவிப்பை வெளியிட வேண்டும். தடை செய்யப்பட்டிருந்த அமைப்புக்கள் தங்களது நோக்கங்களைக் கைவிட்டிருக்க வேண்டும் அல்லது அந்த அமைப்புக்களால் தேசிய பாதுகாப்புக்கு ஏற்படும் பாதிப்பு இல்லாமல் போயிருக்க வேண்டும். இந்த இரண்டில் எது நடந்தது என்பதை அறியும் உரிமை மக்களுக்கு உள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார்.

# விற்பனையின்றி யாழில் எரிபொருள் தேக்கம்!

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கடந்த வாரங்களில் பெற்றோலுக்காக நீண்ட வரிசைகள் காணப்பட்டிருந்த நிலையில், தற்போது எரிபொருள்கள் விற்பனையின்றி தேங்கியுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது கியூ.ஆர் முறைமையில் பெற்றோல் விநியோகம் மேற்கொள்ளப்படும் நிலையில், பெற்றோலை அளவுக்கு அதிகமாகக் கொள்வனவு செய்வது தடுக்கப்பட்டுள்ளது.

இதனால் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெற்றோலை அனைவரும் தடையின்றி பெறக்கூடிய நிலைமை தோன்றியுள்ளது என்று எரிபொருள் நிரப்பு நிலையத் தரப்புகள் தெரிவித்துள்ளன.

வாரத்தில் குறிப்பிட்ட அளவு எரிபொருளையே ஒருவர் கொள்வனவு செய்ய முடியும் என்பதால், நீண்ட வரிசைகளில் காத்திருக்கும் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

இதன் காரணமாக ஏராளமான எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெற்றோல், டீசல் என்பன விற்பனை செய்ய முடியாமல் தேங்கி இருப்பதால், புதிதாக எரிபொருளைக் கொண்டுவர முடியவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தமது வழமையான விற்பனை இலாபம் பாதிக்கப்பட்டுள்ளதாக எரிபொருள் நிலைய உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# இந்தியாவில் விரைவில் 5ஜி செல்போன் சேவை

## சுதந்திர தின உரையில் பிரதமர் மோடி உறுதி



இந்தியாவில் விரைவில் 5ஜி செல்போன் சேவை தொடங்கும் என்று சுதந்திர தின உரையில் பிரதமர் மோடி கூறினார்.

டெல்லி செங்கோட்டையில், நேற்று முன்தினம் தேசியக் கொடியை ஏற்றி வைத்து பிரதமர் மோடி பேசினார்.

அவர் அப்போது கூறியதாவது:–

'இல்லம்தோறும் தேசிய கொடி' என்ற பிரசாரத்துக்கு நாடு முழுவதும் நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. இது நாட்டுக்கு புதிய வலிமையை அளித்துள்ளது. இப்படி ஒரு வலிமை இருப்பது, ஓகஸ்டு 10 ஆம் திகதி வரை யாருக்கும் தெரியாது. இந்த வலிமையை சமூக அறிவியல் நிபுணர்கள் கூட கற்பனை செய்திருக்க மாட்டார்கள்.

சுதந்திர தினம் என்பது சுதந்திரத்துக்காக பாடுபட்ட எண்ணற்ற தலைவர்களுக்கு முன்பு தலைவணங்க எல்லோருக்கும் வாய்ப்பு அளிக்கும் நாள். மகாத்மா காந்தி, நேரு, படேல், நேதாஜி, அம்பேத்கர், வீர சாவர்க்கர், சியாமா பிரசாத் முகர்ஜி, தீனதயாள் உபாத்யாயா, ஜெயபிரகாஷ் நாராயணன், சுப்பிரமணிய பாரதி உள்ளிட்ட தலைவர்களும், வேலு நாச்சியார் உள்ளிட்ட பெண்களும் மற்றும் பழங்குடியினரும் விடுதலைக்காக பாடுபட்டனர்.

### 5ஜி சேவை

நாம் தற்போது 5ஜி செல்போன் சேவை என்ற சகாப்தத்தை நோக்கி அடி எடுத்து வைக்கிறோம். இதற்கு நீண்ட காலம் காத்திருக்க தேவையில்லை. விரைவில், 5ஜி செல்போன் சேவை தொடங்கப் போகிறது.

கிராமங்களில் கண்ணாடி இழை கேபிள் போடப்பட்டு வருகிறது. இதன்மூலம், கிராமங்களிலும் டிஜிற்றல் இந்தியா கனவு நனவாகிறது. கிராமங்களில் 4 லட்சம் பொது சேவை மையங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. அவற்றை நடத்தும் 4 லட்சம் தொழில் முனைவோர்கள் மூலமாக கிராம மக்கள் டிஜிற்றல் சேவைகளை பெறப் போகிறார்கள். டிஜிற்றல் வழியில் கல்வியிலும் முழுமையான புரட்சி வரப் போகிறது.

சூரியசக்தி, ஹைட்ரஜன், மின்சார வாகனங்கள் உற்பத்தி என எரிசக்தி துறையிலும் இந்தியா தற்சார்பு நிலையை அடைந்து வருகிறது.

கடந்த 8 ஆண்டுகளில், ஆதார், நேரடி பணமாற்று திட்டம், செல்போன்கள் ஆகியவற்றை பயன்படுத்தி, ரூ.2 லட்சம் கோடி கறுப்பு பணம் கண்டறியப்பட்டுள்ளது.

உலகம் முழுவதும் நடக்கும் டிஜிற்றல் பண பரிமாற்றங்களில் 40 சதவீத பரிமாற்றங்கள், இந்தியாவில் தான் நடக்கின்றன்.

லால்பகதூர் சாஸ்திரி, 'ஜெய் ஜவான், ஜெய் கிசான்' என்ற முழக்கத்தை எழுப்பினார்.

வாஜ்பாய், 'ஜெய் விஞ்ஞான்' என்ற முழக்கத்தை எழுப்பினார்.

நாம் ஆராய்ச்சியின் முக்கியத்துவத்தை உணர்த்த 'ஜெய்அனுசந்தஹன்'என்றமுழக்கத்தைஎழுப்புவோம்.

ஒவ்வொருவருக்கும் கடமை இருக்கிறது. அதைச் செய்தால், திட்டமிட்ட காலத்துக்கு முன்பே விரும்பிய பலன்களை பெறலாம். – என்று அவர் பேசினார்.




# சிறந்த நடுத்தர நிறுவனங்களின் நாடுகளில் இந்தியா 4 ஆம் இடம்

சிங்கப்பூர்,ஓக.16

ஆசிய – பசிபிக் பிராந்தியத்தில் 'போர்ப்ஸ் ஆசியா' வெளியிட்ட 2022 ஆம் ஆண்டுக்கான 200 சிறந்த நடுத்தர நிறுவனங்களைக் கொண்ட நாடுகளின் பட்டியலில் இந்தியா 24 நிறுவனங்களுடன் 4 ஆவது இடத்தை இந்தியா பிடித்துள்ளது.

இதுகுறித்து அந்தப் பட்டியலில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

கடந்த 2021 இல் இந்தப் பட்டியலில் இந்தியா 26 நிறுவனங்களுடன் 4ஆவது இடத்தில் இருந்தது. இந்தியாவுக்கு அடுத்தபடியாக 22 நிறுவனங்களுடன் சீனா 5 ஆவது இடத்தில் உள்ளது.

ஆசிய – பசிபிக் பிராந்திய நடுத்தர நிறுவனங்களுக்கான ஃபோர்ப்ஸ் பட்டியலில் தைவான் அதிகபட்ச அளவாக 30 நிறுவனங்களை உள்ளடக்கி தொடர்ந்து 9 ஆவது ஆண்டாக முதலிடத்தை தக்கவைத்துள்ளது. ஜப்பான் 29 நிறுவனங்களுடன் 2 ஆவது இடத்திலும், தென் கொரியா 27 நிறுவனங்களுடன் 3 ஆவது இடத்திலும் உள்ளன.

இந்தியாவைப் பொறுத்தவரையில், ஆடை தயாரிப்பில் ஈடுபட்டு வரும் டொலர் இண்டஸ்ட்ரீஸ், கொரோனாப் பாதிப்பிலிருந்து வேகமாக மீண்டு கடந்த மார்ச் மாதத்துடன் முடிவடைந்த 2021 – 2022 ஆம் நிதியாண்டில் 30 சதவீத விற்பனை வளர்ச்சியை பதிவு செய்துள்ளதுடன் அதன் நிகர லாபம் 72 சதவீதம் அதிகரித் துள்ளது. இவ்வாறு அந்தப் பட்டியலில் கூறப்பட்டுள்ளது.



# சர்வகட்சி அரசை ஸ்தாபிக்க பஸில் ராஜபக்ஷவே தடை!

## திஸ்ஸ விதாரண குற்றச்சாட்டு



சர்வக்கட்சி அரசாங்கத்தை ஸ்தாபிப்பதற்கு முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ பாரிய தடைகளை ஏற்படுத்தியுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் மக்களால் புறக்கணிக்கப்பட்ட பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தை முன்னெடுப்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

பதவியை தக்கவைத்துக்கொள்ள ஜனாதிபதி பொதுஜனபெரமுனவிற்குஏற்றாற்போல்செயற்படுகிறார் என லங்கா சமசமாஜ கட்சியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

சர்வக்கட்சி அரசாங்கம் தொடர்பில் வினவிய போது மேற்கண்டாறு குறிப்பிட்டார்.

நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் சகல அரசியல் கட்சிகளையும் ஒன்றிணைத்து பொது கொள்கைக் கமைய வரையறுக்கப்பட்ட கால அடிப்படையில் சர்வக் கட்சி அரசாங்கம் ஸ்தாபிக்கப்பட வேண்டும் என்பதை ஜனாதிபதியிடம் வலியுறுத்தினோம்.

சர்வக்கட்சி அரசாங்கத்தின் வியூகம் மற்றும் அதன் செயற்பாடு தொடர்பில் ஜனாதிபதி இதுவரை வெளிப்படைத் தன்மையுடன் பேச்சு முன்னெடுக்கவில்லை.

சர்வக்கட்சி அரசாங்கத்தை ஸ்தாபிப்பதற்கு முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ பாரிய தடைகளை ஏற்படுத்தியுள்ளார். சர்வக்கட்சி அரசாங்கத்தை ஸ்தாபிக்காமல் மக்களால் புறக்கணிக்கப்பட்ட பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தை முன்னெடுத்து செல்லும் அரசியல் சூழ்ச்சியை பஸில் ராஜபக்ஷ முன்னெடுத்துள்ளார்.

நாடாளுமன்றில் இடம்பெற்ற ஜனாதிபதி தெரிவிற்கான வாக்கெடுப்பின் போது பலருக்கு வரபிரசாதங்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், பலர் அச்சுறுத்தப்பட்டுள்ளமை தற்போது வெளிப்பட்டுள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது பதவியைத் தக்கவைத்துக்கொள்வதற்காக பொதுஜன பெரமுனவின் தேவைக்கமைய செயற்படுகிறார்.

சர்வகட்சி அரசாங்கத்தில் பொதுஜன பெரமுன பிரதான பங்குதாரராகச் செயற்படும் என பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் குறிப்பிட்டுள்ளமை அவதானத்துக்குரியது. மக்களால் கடுமையாக வெறுக்கப்படும் தரப்பினர்களுக்கு அமைச்சுப் பதவிகளை வழங்க வேண்டும் என பொதுஜன பெரமுன வலியுறுத்தியுள்ளமை அரசியல் கட்டமைப்பு தொடர்பில் மக்கள் கொண்டுள்ள வெறுப்பைத் தீவிரப்படுத்தும்.

அரசாங்கத்துக்கு எதிரான மக்கள் போராட்டம் நிறைவடைந்துள்ளது ஆகவே, தனது விருப்பப்படி செயற்படலாம் என அரச தலைவர்கள் கருதுகின்றமை தவறானது. சர்வகட்சி அரசாங்கத்தை ஸ்தாபித்து பிரச்சினைகளுக்குத் தீர்வு காண மக்கள் அரசாங்கத்துக்கு கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. சர்வக்கட்சி அரசாங்கத்தை அமைக்காமல் பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் தோற்றம் பெற்றால் மக்கள் மீண்டும் தொடர் போராட்டத்தில் ஈடுப்படுவார்கள்.
– என்றார்.

# தமிழ் மக்களுக்கு விதைத்த வினையை தற்போது அறுவடைசெய்கிறார் கோட்டா!

## மணிவண்ணன் சாட்டை



தமிழ் மக்களுக்கு செய்த அவலத்துக்கான வினையையே தற்போது கோட்டாபய ராஜபக்ஷ அறுவடை செய்து கொண்டிருக்கின்றார் என யாழ். மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

யாழ். துணவியில் நடைபெற்ற உதைபந்தாட்ட நிகழ்வொன்றில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டபின், ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில் –

'வினை விதைத்தவன் வினையறுப்பான் திணை விதைத்தவன் திணையறுப்பான்" என்றொரு பழமொழி உண்டு.

அதேபோல தான் 2009 இற்கு முற்பட்ட காலப்பகுதியில் குறிப்பாக இறுதி யுத்தம் வன்னிப் பகுதியில் நடைபெற்றபோது தமிழ் மக்கள் பேரவலத்தை சந்தித்ததுடன் இருப்பிடமில்லாது ஒவ்வொரு இடமாக இடம்பெயர்ந்து சென்று இறுதியாக முள்ளிவாய்க்காலுக்குச் சென்று பல்வேறு அவலங்களைச் சந்தித்தார்கள்; இன அழிப்பை சந்தித்தார்கள்.

அந்த காலப்பகுதியிலே அதற்கெல்லாம் பெறுப்பாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்தவர் தான் கோட்டாபய ராஜபக்ஷ. அந்த காலத்தில் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட அவலங்களுக்கு பொறுப்பானவர் என்று பல்வேறு குற்றச்சாட்டுக்கள் மற்றும் யுத்த குற்றங்களுக்கு பொறுப்பானவர் என்று சர்வதேச சட்டங்களால் தண்டிக்கப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டவர் கோட்டா. இன்று தனது சொந்த மக்களாலேயே அந்த நிலைமைக்கு அவர் தள்ளப்பட்டிருக்கின்றார். அவர் விதைத்த வினையை அறுவடை செய்துகொண்டிருக்கின்றார் என்று தான் நான் நினைக்கின்றேன். – எனத் தெரிவித்துள்ளார்.

# கடந்த காலத்தில் இருந்து எவற்றையும் ஜனாதிபதி ரணில் கற்றுக்கொள்ளவில்லை!

## ஓமல்பே சோபித தேரர் சுட்டிக்காட்டு



தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, காலி முகத்திடல் போராட்டம் காரணமாகவே பதவியை பெற்ற அவர் கடந்த காலத்திலிருந்து எதையும் கற்றுக் கொள்ளவில்லை என்று தெரிகிறது என ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர் –

தேசிய சொத்துக்களை அபகரித்தவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் எனவும் ஊழல்வாதிகளை அமைச்சர்களாக நியமிக்கக் கூடாது எனவும் வலியுறுத்தியுள்ளார்.

புதிய நடைமுறைகளுக்குப் பதிலாக, ஜனாதிபதி பழைய நடைமுறைகளையே தொடர்கிறார். அவர் தனது பழைய அமைச்சர்கள், நண்பர்கள் மற்றும் உறவினர்களின் ஆதரவுடன், சுயநலம் மற்றும் மனிதாபிமானமற்ற அரசியல் நிகழ்ச்சி நிரலைத் தொடர்கிறார்.

எனவே, பழைய நடைமுறைகளைக் கைவிட்டு, திருடர்களை தண்டித்து, நாட்டின் தேசிய செல்வத்தை திருடர்களிடம் இருந்து மீட்க வேண்டும் என அவருக்கு கடுமையாக அறிவுறுத்துவதாக ஓமல்பே சோபித தேரர் குறிப்பிட்டுள்ளார்.

# 9,200 லீற்றர் பெற்றோலுடன் நான்கு சந்தேகநபர்கள் கைது



9 ஆயிரத்து 200 லீற்றர் பெற்றோலுடன் நான்கு சந்தேகநபர்கள் ஆனமடுவ பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

பவுஸரில் இருந்து பெற்றோலை லொறியில் ஏற்றிச் செல்ல முற்பட்ட போதே அவர்கள் கைது செய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது, குறித்த பெற்றோல் மண்ணெண்ணெய்க்கு பதிலாக மன் னார் பகுதியில் உள்ள மீனவர்களுக்கு விற்பனை செய்வதற்காக கொண்டு செல்லப்பட்டமை தெரியவந்துள்ளது.

# பெரியவர்களை விட சிறியவர்களுக்கே அதிகம் டெங்கு தாக்கம் ஏற்படுகிறது!



டெங்கு நோய் தாக்கம் பெரியவர்களை விடவும் சிறியவர்களுக்கே அதிகமாக ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு லேடி ரிட்ஜ்வே வைத்தியசாலையில் சிறுவர் நல வைத்திய நிபுணர் பிரதீப் நவபாலசூரியன் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

சிறுவர்களுக்கு இரண்டு நாள்களுக்கு மேல் காய்ச்சல் நீடிக்குமாயின் உடனடியாக வைத்தியரை நாட வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

# கச்சத்தீவை இலங்கையிடம் இருந்து மீட்க தொடர் அழுத்தம் கொடுப்போம்!

## அண்ணாமலை உறுதி



இலங்கை கடற்படையினரின் அச்சுறுத்தலின்றி தமிழகக் கடற்தொழிலாளர்கள் பாக் ஜலசந்தியில் மீன்பிடி தொழிலில் ஈடுபடுவதற்கு வசதியாக கச்சத்தீவை இலங்கையிடம் இருந்து மீட்க மத்திய அரசாங்கத்துக்கு, தமிழக பாரதிய ஜனதா கட்சி தொடர்ந்து அழுத்தம் கொடுக்கும் என மாநிலத்தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

ராமேஸ்வரத்தில் வைத்து நேற்று முன்தினம் செய்தியாளர்கள் மத்தியில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தைக் கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

கடந்த 1972 ஆம் ஆண்டு அப்போதைய பிரதமர் இந்திரா காந்தியால் கச்சத்தீவு இலங்கையிடம் ஒப்படைக்கப்பட்டு, அது தீர்க்கப்பட்ட விவகாரம் என்று கூறப்பட்டது.

எனினும் அதனை மீட்பதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனக் கூறினார்.

நரேந்திர மோடி தலைமையிலான அரசாங்கம் கடற்தொழிலாளர்களின் நலன் காக்க தீவிரம் காட்டி வருகின்றது. எனவே, தமிழக பா.ஜ.க. பிரிவு இந்த விவகாரத்தில் மத்திய அரசுக்கு தொடர்ந்து அழுத்தம் கொடுக்கும்.

கச்சத்தீவு கடற்தொழிலாளர்களை விட, தமிழக கடற்தொழிலாளர்களுக்கே மிகவும் பயனுள்ளதாகவும் இருக்கும். கச்சத்தீவு பகுதியில் மட்டுமே கடற்தொழிலாளர்கள் மீன்பிடிக்க முடியும் என்றாலும், இந்திய கடல் எல்லைக்குள் எல்லை நிர்ணயம் செய்வது தர்க்க ரீதியாக சரிமீயானதாக இருக்கும்.

2014 ஆம் ஆண்டில் நரேந்திர மோடி பதவியேற்ற பிறகு, இலங்கைக் கடற்படையினரால் கடற்தொழிலாளர்கள்கைதுசெய்யப்படும்சம்பவங்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்துள்ளது. கைது செய்யப்பட்டாலும், மத்திய அரசாங்கம் தலையிட்டு அவர்களைப் பத்திரமாக அழைத்து வந்தது.

எனவே, கச்சத்தீவை மீட்பது தான் அமைதியாக மீன்பிடிக்கான ஒரே வழி, அதை பா.ஜ.க. மேற்கொள்ளும். – எனக் குறிப்பிட்டுள்ளார்.



## நல்லூர் கந்தசுவாமி ஆலய குபேர திக்கு ஸ்ரீ குமார வாசல் கோபுர கலசாபிஷேகம்!

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் அமைக்கப்பட்டுள்ள குபேர திக்கு ஸ்ரீ குமார வாசல் கோபுரத்தின் கலசாபிஷேகம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது.

இது தொடர்பில் பொது மக்களுக்கு அறிவித்தலொன்றை நல்லூர் கந்தசுவாமி தேவஸ்தானம் வெளியிட்டுள்ளது.

இந்த அறிவித்தலில், கார்த்திகை மஹோற்சவத்தன்று காலை 6 மணி முதல் குபேர திக்கு ஸ்ரீ குமார வாசல் கோபுரத்தின் கலசாபிகேம் நடைபெறவுள்ளது. கந்தப்பெருமான் எழுந்தருளி, உள்வீதி உலா வந்து குமார வாசலைத் திறந்ததும், கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

இதன்போது பொது மக்கள் அனைவரும் வைரவ பெருமான் வாசல் வழியாக பழைய வாகன சாலை பாதையில் சென்று குமார வெளிப் பூந்தோட்டத்தின் ஊடாகத் தமது வழிப்பாடுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

## தொழிலை சுதந்திரமாக செய்ய ஏற்பாடு செய்க!

### முல்லை கடற்றொழிலாளர் கோரிக்கை



முல்லைத்தீவு மாவட்டத்தின் கடற்தொழிலாளர்கள் தமது தொழிலை சுதந்திரமாகச் செய்வதற்கான சூழ்நிலைகள் ஏற்படுத்தித் தரப்பட வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரையோரப்பகுதிகளில் தற்போது இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறல்கள் மற்றும் வெளிமாவட்ட கடற்தொழிலாளர்களின் அத்துமீறல்கள் அதிகளவில் காணப்படுகின்றமையால் அப்பகுதி மக்கள் பெரும் பிரச்சினைகளுக்கு உள்ளாகின்றனர் எனவும் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் கடற்தொழிலாளர்கள் மேலும் தெரிவிக்கையில் –

எமது வாழ்வாதாரத் தொழில்கள் பாதிக்கப்படுகின்றன.

இதற்கான சரியான தீர்வு ஒன்றைப் பெற்றுத்தருமாறு நாங்கள் தொடர்ச்சியாகக் கோரிக்கை விடுத்து வருகின்றோம்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் முகத்துவாரம் நல்ல தண்ணித்தொடுவாய் முதல் பேய்ப்பாறைப் பிட்டி வரைக்குமான 74 கிலோ மீற்றர் நீளமான கரையோரப்பகுதிகளிலும் ஆழ்கடல் பகுதிகளிலும் தமது வாழ்வாதாரத் தொழில்களை மேற்கொள்ளும் வகையில் சுமார் ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட கடற்தொழிலாளர்கள் வாழ்ந்து வருகின்றோம்.

இந்த நிலையில் எமது பகுதிகளில் தடைசெய்யப்பட்ட மற்றும் அனுமதிகளை மீறிய தொழில்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதனால் எமது தொழில் நடவடிக்கைகள் பாதிக்கப்படுகின்றன, கடற்தொழிலை வாழ்வாதாரமாகக் கொண்ட ஏராளமான குடும்பங்கள் தமது அன்றாட வாழ்வாதாரத்துக்கே பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்ளும் நிலைமை காணப்படுகின்றது.

இதற்கமைய நிபந்தனைகளை மீறிய அட்டைத் தொழில், வெளிச்சம் பாச்சி மீன் பிடித்தல், கரைவலைப்பாடுகளில் உழவு இயந்திரங்களைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுதல் மற்றும் சிறுகடல் பகுதிகளில் தடைசெய்யப்பட்ட தொழில்களை மேற்கொள்ளுதல் என்பன பெரிதும் பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன.

கடற்தொழில்களை விடுத்து தற்போது கூலி வேலைகளுக்கே செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது. – என்று விசனம் தெரிவித்துள்ளனர்.

## கோப் குழுவின் புதிய தலைவராகத் தனது பெயர் முன்மொழியப்பட்டதை உறுதிப்படுத்தினார் எரான்!

பொது நிறுவனங்கள் தொடர்பான (கோப்) குழுவின் புதிய தலைவராகத் தனது பெயரை நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் பரிந்துரைத்துள்ளதைரய ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரான எரான் விக்ரமரத்ன உறுதிப்படுத்தியுள்ளார்.

ஏரான் விக்கிரமரத்ன கோப் அமைப்பின் தலைவராகவும், நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாஷிம் பொதுக் கணக்குகள் குழுவின் (கோபா) தலைவராகவும் பரிந்துரைக்கப்பட்டனர் எள வெளியான செய்திகளுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

பதவியை வழங்குவது தொடர்பான கொள்கையை அரசாங்கமே தீர்மானிக்க வேண்டும்.

மேலும் இரண்டு குழுக்களிலும் பெரும்பான்மை உறுப்பினர்களைக் கொண்ட அரசாங்கத்தாலேயே இதன் இறுதி முடிவு எடுக்கப்பட வேண்டும்.

இதேவேளை, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் குழுக்களின் தலைவர்களாக நியமிக்கப்படுவார்கள் என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன கடந்த வாரம் உறுதியளித்திருந்தார்.



எதிர்க்கட்சியின் பிரதம அமைப்பாளரான லக்ஷ்மன் கிரியெல்ல நாடாளுமன்றத்தில் வினவியபோதே சபாநாயகர் இந்த உறுதியை வழங்கியுள்ளார். – எனத் தெரிவித்துள்ளார்.

## அமெரிக்க வெளிவிவகார கொள்கையில் ஈழத் தமிழர் தொடர்பில் முக்கிய மாற்றம்!

### உலகத் தமிழர் பேரவை பேச்சாளர் சுரேன் சுரேந்திரன் தெரிவிப்பு



அமெரிக்க வெளிவிவகாரக் கொள்கையில் இலங்கையில் தமிழ் மக்களுக்கு ஓர் அரசியல் தீர்வு வர வேண்டும் என்பதை முக்கியமான விடயமாக அமெரிக்க முன் நகர்த்த வேண்டும் என கோரிக்கை விடுத்திருந்ததாக உலகத் தமிழர் பேரவை பேச்சாளர் சுரேன் சுரேந்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

இதுவரை காலமும் இலங்கைத் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு வேண்டும் என சர்வதேச அரங்குகளில் இந்தியா மட்டும் தான் கூறிக்கொண்டிருந்தது.

மேலும் மார்ச் மாதம் அளவில் இலங்கையில் அமெரிக்கஉயர்ஸ்தானிகர்ஜூலிசங்கலந்துரையாடல்களில் ஈடுப்பட்ட போது தமிழ் மக்களுக்கான தீர்வு முக்கியம் என்பதை வலியுறுத்தியிருந்தார்.

இந்நிலையில், புலம்பெயர் அமைப்புகள் மீது தடைவிதிப்பதும் நீக்குவதும் இலங்கை அரசாங்கத்தால் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்ற ஒரு செயற்பாடாகவே காணப்படுகின்றது. அதாவது மஹிந்த அரசாங்கம், கோட்டாபய அரசாங்கம் மற்றும் ரணில் அரசாங்கம் என ஒவ்வொரு அரசாங்கமும் இந்த செயற்பாட்டைச் செய்கின்றது.

இந்த செயற்பாடு அவர்களின் இராஜதந்திரமாகவோ அல்லது அரசியல் தேவையாகவோ அமையலாம்.

எவ்வாறெனினும் இலங்கை அரசாங்கம் இவ்வாறு செயற்படுவதால் எமது பிரசாரங்களிலோ, வேலைத்திட்டங்களிலோ எந்த மாற்றமும் ஏற்படப் போவதில்லை.

நாங்கள் தொடர்ந்தும் சர்வதேச அரசாங்கங்களையும் நிறுவனங்களையும் சந்தித்துக்கொண்டு தான் இருக்கின்றோம். புலம்பெயர் அமைப்புகள் மீதான தடையை எப்போதும் பெரிதாக நினைக்கவில்லை. – எனக் கூறியுள்ளார்.

# வங்குரோத்து அடைந்துள்ளது இலங்கை வங்கிக் கட்டமைப்பு சீர்குலையும் ஆபத்து!

## எச்சரிக்கிறார் அஜித் நிவாட் கப்ரால்

இலங்கை வங்குரோத்து அடைந்த நாடாக மாற்றமடைந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

ஸ்டான்டர்ட் என்ட் புவர் என்னும் சர்வதேசக் கடன் தரப்படுத்தல் நிறுவனம் இலங்கையை டி தரத்திற்கு தாழ்த்தியுள்ளதாகவும், இது வங்குரோத்து நிலையைர் பிரதிபலிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஊடக அறிக்கை ஒன்றின் மூலம் அவர் இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த 2021 ஆம் ஆண்டு முதல் சில அரசியல்வாதிகள், தொழில்வாண்மையாளர்கள் மற்றும் வர்த்தகர்கள் கடன் செலுத்த வேண்டாம் எனக் கோரியதாகத் தெரிவித்துள்ளார்.

கடன் செலுத்தாது அந்நிய செலாவணியை சேமித்துக் கொள்ளுமாறு கோரியதாக அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் அந்தக் காலத்தில் அரசாங்கம் கடனை ஏதாவது ஒரு வகையில் செலுத்தியதாகவும், இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 12 ஆம் திகதி வரையில் கடன் செலுத்தப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

கடன் செலுத்துகையைத் தவிர்க்கும் புதிய கொள்கையொன்றை மத்திய வங்கியின் தற்போதைய ஆளுநர் நந்தலால் வீரசிங்க உள்ளிட்டவர்கள் அறிமுகம் செய்துள்ளனர் எனத் தெரிவித்துள்ளார்.

இதனால் நாட்டுக்கு பாரதூரமான விளைவுகளை எதிர்நோக்க நேரிட்டுள்ளது என அஜித் நிவாட் கப்ரால் சுட்டிக்காட்டியுள்ளார்.

எரிபொருள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களைப் பெற்றுக்கொள்வதில் கூட தற்பொழுது முடியாத நிலை உருவாகியுள்ளது.

கடன் செலுத்துகையைத் தவறவிட்டதால் இலங்கைக்கு கிடைக்கவிருந்த 100 கோடி அமெரிக்க டொலர் நிதி கிடைக்கவில்லை.



கடன் செலுத்த முடியாத நிலைமைகளால், இலங்கையின் ஒட்டுமொத்த வங்கிக் கட்டமைப்பும் சீர்குலையும் ஆபத்து காணப்படுகின்றதா என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

கடன் செலுத்த வேண்டாம் என கூறியவர்கள் தற்பொழுது சத்தமில்லாம் இருக்கின்றார்கள் எனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

# கடமைகளைப் பொறுப்பேற்பதற்கு முன்னரே இடமாற்றம் செய்யப்பட்ட பொலிஸ் அதிகாரி!

அரசியல் அழுத்தங்கள் காரணமாகக் கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொள்ள முன்னதாகவே பொலிஸ் அதிகாரியொருவர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பூகொட பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்ட அஜித் சேனாநாயக்க, கடமைகளைப் பொறுப்பேற்க முன்னதாகவே இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்த இரண்டு பிரபல அரசியல்வாதிகளின் அழுத்தம் காரணமாக இவ்வாறு இடமாற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக செய்தி வெளியாகியுள்ளது.

தங்களது அரசியல் நடவடிக்கைகளுக்கு உதவிகளை செய்யாத காரணத்தால் மேற்படி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடமைகளை பொறுப்பேற்றுக்கொள்ள சுப நேரம் பார்த்திருந்த போது, பொலிஸ் உயர் அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகள் மீது அழுத்தங்களைப் பிரயோகித்து இந்த இடமாற்ற உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் அந்தந்த பொலிஸ் பிரிவிற்கு அரசியல்வாதிகளின் பரிந்துரைகளின் அடிப்படையில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் நியமிக்கப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் அரசியல்வாதிகளின் வீடுகள் தீக்கிரையான போது அந்தந்த பொலிஸ் பிரிவிற்கு பொறுப்பான அதிகாரிகள் அரசியல்வாதிகளின் கோரிக்கைக்கு அமைய நியமிக்கப்பட்டனர் என பொலிஸ் மா அதிபர் கூறியிருந்தார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பதவி ஏற்றுக் கொண்டதன் பின்னர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் நேர்முகத் தேர்வு மூலம் நியமிக்கப்பட்டனர்.

எனினும், பொலிஸ் தலைமையகத்தால் நியமிக்கப்பட்ட அதிகாரி ஒருவர் அரசியல் அழுத்தங்கள் காரணமாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார் என சிங்கள பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

# இனி ஒருபோதும் தேர்தலில் போட்டியிடப்போவதில்லை!

## விமலவீர திஸாநாயக்க திட்டவட்டம்



தான் இனி ஒருபோதும் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமலவீர திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தனது அரசியலின் இறுதிக் காலக்கட்டம் எனவும் அவர் இதன்போது தெரிவித்துள்ளார்.

போராட்டக்காரர்கள் என்ன மாதிரியான மாற்றங்களை ஏற்படுத்தப் போகிறார்கள் என்பதை ஒதுங்கியிருந்து பார்க்கப்போவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# ஒரே நாளில் உலகளவில் பிரபலமான இலங்கை சிறுமி!



இலங்கையை சேர்ந்த சிறுமி ஒருவர் தனது திறமையால் ஒரே தினத்தில் உலகளாவிய ரீதியில் பிரபல்யம் அடைந்துள்ளார்.

கதிர்காமத்தில் இடம்பெற்ற பெரஹரா நிகழ்வை அழகுபடுத்திய 11 வயதுடைய சிறுமி தொடர்பில் இலங்கை மக்களால் அதிகம் பேசப்பட்டு வருகின்றது.

பண்டாரகம பிரதேசத்தை சேர்ந்த சசாதி என்ற சிறுமி கதிர்காமத்தில் இடம்பெற்ற பெரஹரா நிகழ்வில் மயில் வேடமிட்டு நடனமாடினார். அவரின் நடன காணொலி வைரலாக பரவி வருகிறது.

பிறவியிலேயே வாய் பேச முடியாத காது கேட்காத இந்த சிறுமியின் நடனம் உள்நாட்டு மக்களை மட்டுமன்றி வெளிநாட்டு சுற்றுலா பயணிகளையும் மிகவும் கவர்ந்துள்ளது.

இம்முறை புலமைப் பரிசீல் பரீட்சைக்கு முகம் கொடுக்கவுள்ள சசாதியின் இயலாமை தொடர்பாகப் பலரும் அனுதாபம் வெளியிட்டு வருகின்றமைக்கு அவரது பெற்றோர்கள் வருத்தம் தெரிவித்துள்ளனர்.

எங்கள் மகளை யாரும் பாவமாகப் பார்க்க வேண்டாம். அவரது இயலாமையை அவமானப்படுத்த வேண்டாம். பேஸ்புக், யூடியுப் போன்ற சமூக வலைத்தளங்களில் பல்வேறு பதிவுகள் தங்கள் மகள் தொடர்பாகக் காண்பதாகவும் அவ்வாறு செய்ய வேண்டாம் என பெற்றோர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

தங்கள் மகளுக்கு யாரும் பண உதவிகள் செய்ய வேண்டாம். அவருக்கு வேண்டிய அனைத்தும் நாங்கள் செய்துள்ளோம். அவரைத் தங்கள் சகோதரியாகப் பாருங்கள்.

சிறுமி என்று சொல்வதனை விட அவரை ஒரு குழந்தையாகவே நாங்கள் பார்க்கிறோம். அனைவரும் அவரைத் தங்கள் தங்கையாக பார்க்குமாறு பெற்றோர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

# பாரிய ஆபத்து நிலைமையை எதிர்கொண்டுள்ள கோட்டா!

## ஜனாதிபதி சட்டத்தரணி சுட்டிக்காட்டு



அகதிகள் போன்று நாடு விட்டு நாடு செல்லும் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பாரிய ஆபத்தை எதிர்நோக்கியுள்ளார் என ஜனாதிபதி சட்டத்தரணி மைத்திரி குணரத்ன தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டிற்கு விஜயம் செய்வது பிரச்சினையல்ல எனவும் அவர் தெரிவித்துள்ளார். இந்நிலையில், அரசாங்கத்தின் தலையீட்டின் ஊடாக முன்னாள் ஜனாதிபதியை பூரண பாதுகாப்புடன் இலங்கைக்கு அழைத்து வர வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

அது தொடர்பில் ஜனாதிபதி முழு கவனம் செலுத்தவேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, கோட்டாபய ராஜபக்ஷவை இலங்கைக்கு அழைத்து வர தற்போதைய அரசாங்கம் உடனடியாகத் தலையிட வேண்டுமென எமது இலங்கை தேசிய இயக்கம் வலியுறுத்தியுள்ளது. இது தொடர்பாக அந்த அமைப்பின் தலைவர் விமுக்தி துஷாந்த கருத்து தெரிவிக்கையில் –

முன்னாள் ஜனாதிபதியை மீண்டும் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டதன் பின்னர், அவர் பதவியேற்கும் முன்னர் இருந்த வழக்குகளை மீள விசாரணை செய்து, தற்போதைய சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு அமைவாக நீதிமன்ற நடவடிக்கை எடுப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் பெரும்பான்மை ஆட்சியாளர்களின் தன்னிச்சையான மற்றும் பொறுப்பற்ற நடத்தையால் குடிமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளமையால், ஜனாதிபதி பதவிக்கு பொறுப்புக் கூறும் செயற்பாடு ஒன்று உருவாக்கப்பட வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார்.

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். ‘காலைக்கதிர்’ வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!



- செல்லத்துரை ரவீந்திரன் -

## அங்கம்-95

**சிங்களப் பேரினவாதத்தின் கட்டமைப்புகள்**

‘தமிழீழத் தாயகப் பிரச்சினை’ என்ற கையேடு ஒன்று ‘சிங்களக் குரல்’ வெளியீடாக 2016 இல் பதிப்பிடப்பட்டது. அந்த பதிப்பில் அதனைத் தொகுப்பதற்கு தேவையான தகவல்களை 2002 - 2003ஆம் ஆண்டின்போது பேராதனை பல்கலைக்கழகத்தில் ‘சரசவி சங்வாத கேந்திரய’ மேற்கொண்ட ‘யாழ்ப்பாணத்தின் சிங்கள பௌத்த உரிமை’ எனும் கண்காட்சி அறையில் இருந்து பெற்றுக் கொண்டதாகவும், அதற்குத் தலைவராக சுமேதே வீரவர்த்தன, செயலாளராக றொான் ஜயசூரிய, பொருளாளராக கமல் பத்மபிரிய மற்றும் அதன் பல அங்கத்தவர்களும் பணியாற்றினார்கள் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேசமயம் சிங்களக் குரலின் வெளியீட்டை வெளிக்கொணர்வதற்கு தொல்பொருளியல் பட்டப்பின்படிப்பு நிறுவனத்தின் மூத்த விரிவுரையாளர் கலாநிதி ராஜ் சோமதேவ, பேராசிரியர் மெண்டிஸ் ரோஹணதீர, பேராசிரியர் அபய ஆரியசிங்க, தொல்பொருள் திணைக்களத்தின் நாமல் கொடிதுவக்கு, தேசிய நூதனசாலை அதிகாரி ரஞ்சித் ஹேவகே, துஷித மெண்டிஸ் மற்றும் ஸ்ரீநாத் கணேவத்த அவர்களும் உதவிகள் தந்தனர் எனக் கையேடு குறிப்பிடுகிறது.

அதில் தரப்பட்ட கருத்துக்களை ஆராயும் போது, காலக்கிரமமாக சிங்கள பெரும்பான்மைகள் முழுத்தீவுக்கும் உரிமை கோரியதின் வாதங்களையும், ஒவ்வொரு கட்டத்திலும் எதுவிதமான அரசியல் இணக்கம் ஏற்பட்ட போதும் சிங்களப் பௌத்த பேரினவாதிகளால் அவை தடுக்கப்பட்டமை பற்றிய விவரங்களையும் காணலாம்.

2009ஆம் ஆண்டு போரில் முடிவில் ராஜபக்ஷ தரப்புகள், தமிழ் மண்ணை இராணுவத்தின் துணையோடு, தொல்பொருள் திணைக்களத்தின் ஆதாரங்களோடு, கபளீகரம் செய்ய ஏற்படுத்திய ஒரு கட்டமைப்பின் அங்கத்தினர்கள்தான் முன் குறிப்பிட்டவர்கள். ‘ஒரு நாடு; ஒரு சட்டம்’ என்பதன் கீழ் நிலம் முழுவதுமே அவர்களின் அதிகாரத்துக்குள் கொண்டு வருவதற்காக இந்த அமைப்புகள் கோட்டபாயவை ஜனாதிபதியாக்கின.



யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் பிரபாகரன்.

அவர்கள் சொல்லும் வாதங்களை எல்லாம் நான் இங்கு தரவில்லை. சரித்திரங்கள், புராணக் கதைகளுக்கெல்லாம் பிரதிவாதங்கள் உண்டு. ஆனால் தமிழ் மக்கள் எதிர்கொள்வதின் புரிந்துணர்வுக்காக அந்தக் கையேட்டின் சில பகுதிகளைத் தருகிறேன்:–

**தாயகப் பிரச்சினை**

“தமிழ்த் தலைவர்களான சுந்தரலிங்கம் முதல் பிரபாகரன் வரை அனைத்துத் தலைவர்களும் குறிப்பிடுவது என்னவென்றால் சிங்கள மக்களது 2,500 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றை குறித்து நிற்கும் மகாவம்சம் உட்பட சிங்கள வரலாற்று நூல்கள் இந்த நாட்டின் உண்மையான வரலாற்றை மறைத்திருப்பதாயும், ஆதி காலத்தில் ஒட்டுமொத்தமான தீவும் தமிழ் மக்களுக்குச் சொந்தமாக இருந்திருப்பதும் என்பதுமாகும். மேலும் இவர்கள் இவ்வாறாக தமிழ் மக்களின் உரித்தாக இல்லாததாக இருந்தாலும் பின்னர் பலதரப்பட்ட காரணங்களால் இவை வடக்கு, கிழக்கு பிரதேசங்களுக்கு கட்டுப்பட்டிருந்ததாகவும் கருதுகின்றனர். மேற்குறிப்பிட்ட பூமி 1619 இல் போர்த்துக்கேயர்களுக்கும், பிற்பாடு ஒல்லாந்தர்களுக்கும், ஆங்கிலேயர்களுக்கும் அடி பணிந்திருந்ததாகவும், தொடர்ந்து 1948 பெப்ரவரி நாலாம் திகதி தமது வரலாற்றுத் தாயகம் சிங்களப் பேரரசுக்கு அடிபணிந்ததாகவும், அதனால் இப்போது புலிகளின் இயக்கம் உட்பட பிரிவினவாதிகள் தமது வரலாற்றுத் தமிழ் தாயகத்தை ஏற்றுக் கொள்ளும்படியும், தமிழினம் தனிப்பட்ட இனமாக இருக்கும்படியால் அவ்வினத்தின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக் கொள்ளும்படியும் கோரி வருகின்றனர்.

“செல்வநாயகம், அமிர்தலிங்கம் போன்றோர் குறிப்பிடும் வரலாற்றுத் தேவைக்கேற்ப, ஓரிரு வருடங்களுக்கு முன்னர் நடந்த மாவீரர் ஞாபகார்த்த விழாவின்போது, ‘மகாவம்சம் என்னும் பிழையான சிந்தனையில் சிங்களவர் சிக்கி இருக்கின்றனர்’ எனப் புலிகளின் தலைவர் பிரபாகரனால் குறிப்பிடப்பட்டது. இந்த அனைத்து காரணங்களால் புலிகளின் இயக்கம் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்காக ஒரு தனிப்பட்ட இராச்சியம் அடைய முயற்சிப்பது தெளிவானது. அதற்கு, சிங்களத்தை மாத்திரம் அரசகரும மொழியாக ஏற்றுக்கொண்டிருப்பது அல்லது இத்தீவு ஒரு தனி இராஜ்ஜியமாக நிலவி இருப்பது காரணமல்ல. இதனால் இந்நாட்டில் நிலவி வரும் போர், பிரிவினவாதப் பிரச்சினை காரணமாகியிருப்பதோ அல்லது மேற்கத்தேய இராச்சியம் உருவாகுதல் தொடர்பாக நிலவும் எண்ணங்களால் இந்நாட்டில் ஒரு தேசியப் பிரச்சனை இருப்பதாகக் கூற முடியாது.

“அவ்வாறாயின் இந்நாட்டில் ஏற்பட்டிருக்கும் பிரச்சினை என்ன?

“மேற்படி இந்நாட்டில் நிலவுவது தாயகம் தொடர்பான பிரச்சினை என்று எம்மால் சந்தேகமின்றிக் குறிப்பிட முடியும். ‘தமிழ் தாயகம்’ ஒன்று நிலவி வந்துள்ளது என்பதை அடிப்படையாகக் கொண்டு ஏற்பட்டிருக்கும் இப்பிரச்சினையை தாயகப் பிரச்சினை என்று அழைக்காமல் வேறு என்னவென்று அழைப்பது?

“எஸ்.ஜே.வி.செல்வநாயகம் போன்ற தமிழ் தலைவர்கள் பண்டாரநாயக்காவுடன் 1957 இலிலும், டட்லி சேனநாயக்காவுடன் 1967 இலிலும் ஒப்பந்தங்களைக் கைசாத்திட்டு வடக்கு, கிழக்குக்கு ஒரு தனியான ஆட்சியைப் பெற்றுக் கொள்வதற்காக ஆயத்தமானதும், தமிழ் தலைவர்களின் கோரிக்கைக்கு இணங்கி 1987 இல் மாகாண சபை முறைமையை அமுல்படுத்தியமையும், 2002 பெப்ரவரி 22ஆம் திகதி போர் நிறுத்த ஒப்பந்தத்தைக் கைச்சாத்திட்டமையும் வடக்கு, கிழக்கு பகுதிகளிலும்




வரலாற்று வேரோடல் கொண்ட தமிழ் இராச்சியம் நிலவியுள்ளது என்ற எண்ணத்தை தவறாக ஏற்றுக் கொண்டுள்ளதாகும்.”

– இப்படி அதில் கூறப்பட்டுள்ளது.

ஆக, சிங்களப் பேராண்மை அரசியல்கள், அதன் தலைவர்கள் இந்த சிங்கள பௌத்த வாதத்தை மீறி தனித்துவமான தமிழ்ப் பிரதேசங்களுக்கு இணக்கத்தைத் தரப்போவதில்லை. அது திம்பு மாநாட்டில் அவர்களின் மறுப்பால் உறுதிப்படுத்தப்பட்டது.

ராஜீவ் காந்தி, பிரபாகரனுக்கு ‘எவ்வளவோ பிரயத்தனங்களுக்குப் பிறகு சிங்கள மக்களின் அப்படியான மனோபாவங்களிலிருந்து வடக்கு, கிழக்குப் பகுதிகளை தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களாகவும், அவை இணைந்த மாகாணங்களாக, தமிழ் மக்களின் சுயாட்சிக்கான அடிப்படைகளாக ஏற்றுக் கொள்ள ஜே.ஆரைக் கொண்டு வந்துள்ளோம், எல்லாவற்றையும் ஒரே நேரத்தில் அடைந்து கொள்ள முடியாது, கட்டங்கட்டமாகத்தான் முன்னேற வேண்டும்’ என்று கூறியவற்றின் பின்னணியைப் புரிந்து கொள்ள வேண்டும்.

மேலும் யாழ்ப்பாணத்தில் இருந்து கண்டெடுக்கப்பட்டுள்ள தொல்பொருளியல் சார் காரணிகளால் வரலாற்றில் தமிழீழ இராச்சியம் ஒன்று நிலவியுள்ளதா என்பதை அவர்கள் ஆராயும் சான்றுகளாக முன்வைப்பவை பற்றி நாம் கவனிக்க வேண்டும். அவை பற்றி நாளை பார்ப்போம்.

(வளரும்)



அப்போதைய பிரதமர் ரணில் தாம் ஒப்பமிட்ட யுத்த நிறுத்த ஆவணத்தை வவுனியா செயலகத்தில் வைத்து நோர்வேத் தூதுவரிடம் ஒப்படைக்கின்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# செப்ரெம்பர் நடக்கும் ஜெனீவா கூட்டத் தொடரில் இலங்கை கடும் நெருக்கடிகளை எதிர்கொள்ளும்!

## எச்சரிக்கிறார் லக்ஷமன் கிரியல்ல

அவசர கால நிலை பிரகடனம், அமைதியான ஆர்ப்பாட்டக்காரர்கள் மீதான தாக்குதல்கள் போன்ற அரசாங்கத்தின் ஜனநாயக விரோத செயற்பாடுகளால் செப்ரெம்பரில் இடம்பெறவுள்ள ஜெனீவா கூட்டத் தொடரில் இலங்கை நெருக்கடிகளை எதிர்கொள்ளும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

பொதுஜன பெரமுன அரசாங்கம் ஆட்சியைக் கைப்பற்றிய பின்னர் ஐ.நாவில் இலங்கைக்கு எதிரான தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டது. இம்மாதம் ஐ.நா. குழுவினர் நாட்டுக்கு வருகை தரவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. செப்ரெம்பரில் மனித உரிமைகள் கூட்டத் தொடர் இடம்பெறவுள்ளது. இதன் போது எமக்கு எவ்வாறான நிலைமைகள் ஏற்படும் என்று கூற முடியாது.

இலங்கைக்கு மேலும் இரு ஆண்டுகள் கால அவகாசம் வழங்குவது தொடர்பாக ஐ.நா. அவதானம் செலுத்தியிருந்தது. ஆனால் இந்த அரசாங்கம் அவசரகால நிலைமையைப் பிரகடனப்படுத்தி , அமைதியான ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது தாக்குதல்களை மேற்கொண்டது. தொழிற்சங்கத் தலைவர்களைக் கைது செய்தது. இவ்வாறான செயற்பாடுகளால் ஐ.நாவின் தீர்மானத்திலும் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்கான அதிகாரம் செப்ரெம்பர் மாதத்தின் பின்னர் தேர்தல் ஆணைக்குழு வசமாகும். அதன் பின்னர் அதன் காலத்தை நீடிக்க முடியாது. இந்த விவகாரத்தில் தேர்தல் ஆணைக்குழு எவ்வாறு செயற்படுகிறது என்பதையே அவதானித்துக் கொண்டிருக்கின்றோம். காரணம் தேர்தல்கள் ஆணைக்குழு தேர்தலை நடத்த வேண்டும் என்ற தேவை இல்லை என்பதைப் போன்றே செயற்பட்டுக் கொண்டிருக்கிறது.

அரசாங்கத்துக்கு சாதகமாக அமைந்தால் தேர்தலை நடத்துவதற்கு ஆணைக்குழு ஆர்வம் காண்பிக்கும். மாறாக அரசாங்கத்துக்கு பாதகமாக அமைந்தால் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் ஆர்வம் காண்பிக்காது. இதுவே உண்மை நிலைவரமாகும். கொவிட் காலத்தில் நாடாளுமன்றத் தேர்தலை இரண்டு ஆண்டுகள் ஒத்தி வைக்குமாறு கோரிய போதிலும், அரசாங்கம் அதற்கான நடவடிக்கைகளை எடுக்கவில்லை.

ஆனால் அதன் பின்னர் உள்ளூராட்சி தேர்தலின் போது , கொவிட் தொற்று எனக் கூறி அதனைக் காலம் தாழ்த்தினர். தேர்தல் ஆணைக்குழுவை பகிரங்கமாக செயற்படுமாறு வலியுறுத்துகின்றோம். இது தொடர்பில்



நாம் தேர்தல் ஆணைக்குழுவிடம் கேள்வியெழுப்பிய போது, கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகக் கூறுகின்றனர்.

கடிதங்கள் எமக்குத் தேவையற்றவை. தேர்தல்கள் காலம் தாழ்த்தப்படுகின்றமையை உண்மையில் ஆணைக்குழு எதிர்க்குமாயின் அதனைப் பகிரங்கமாக அறிவிக்க வேண்டும். எனினும் இதுவரையில் தேர்தல் ஆணைக்குழு இந்த விவகாரத்தில் பகிரங்கமாக அதன் எதிர்ப்பை வெளியிட்டதில்லை. – என்றார்.

# ராஜபக்ஷர்களின் குப்பை லொறியாக நாட்டில் எவரும் மாற மாட்டார்கள்!

## சஜித் இறுமாப்புப் பேச்சு

இந்நாட்டை இந்தளவு அதலபாதாளத்திற்கு கொண்டு சென்றது ராஜபக்ஷ ஆட்சிதான் எனவும், அந்த ராஜபக்ஷர்களின் குப்பைகளை இழுக்கும் குப்பை வண்டியாக ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்த எவரும் மாற மாட்டார்கள் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இன்று முழு நாடும் பொருளாதார சமூக அரசியல் ரீதியாக மோசமான நிலையில் உள்ளதாகவும், 2019 மற்றும் 2020 ஆகிய இரண்டு தேர்தல்களிலும் மக்கள் சரியான பாதைக்குப் பதிலாக தவறான பாதையைத் தேர்ந்தெடுத்தமையே இதற்குக் காரணம் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

ரக்வான தேர்தல் தொகுதியின் ஐக்கிய மக்கள் சக்தி அமைப்பாளர் பீ.கே.ஆரியவன்ஸவால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தொகுதிக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த வங்குரோத்து நாட்டில் நடக்கும் சமீபத்திய அதிசயம் சர்வகட்சி அரசாங்கம் எனத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், நாட்டுக்கு தேவை அமைச்சுப்



பதவிகளை அணிந்து கொண்டு பதவிக்குப் பின்னால் செல்லும் நிலை அல்ல எனவும் அவர் தெரிவித்தார்.

தற்போது உடனடியாக மேற்கொள்ள வேண்டியது தேர்தலை நடத்தி மக்களின் முடிவைக் கேட்பதுதான் எனத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், அதற்கு மேல் தீர்வொன்று இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.



# பிள்ளையானின் அலுவலகத்தில் கைக்குண்டுகள் மீட்கப்பட்டன!

நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தனின் (பிள்ளையான்) அலுவலகத்தின் கூரையில் இரண்டு கைக்குண்டுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஏறாவூர் பகுதியிலுள்ள வீடொன்றில் நடத்தி செல்லப்படும் அலுவலகத்தின் உள் பக்க கூரையில் இருந்து இவை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இவை வெளி நாட்டில் தயாரிக்கப்பட்ட கைக்குண்டுகள் என ஏறாவூர் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் இந்த வீட்டை கொள்வனவு செய்தவர் மேற்கூரையை சீர்செய்யச் சென்ற போது இந்த கைக்குண்டுகளைக் கண்டு பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.

இதையடுத்து பொலிஸ் குழுவொன்று அங்கு சென்று அவற்றைக் கைப்பற்றியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# போலி கிரிப்டோ கரன்சி திட்டத்தில் சிக்கிக்கொண்ட இலங்கையர்கள்!

## பல லட்சம் ரூபா இழப்பு

Sports Chain's எனப்படும் போலி கிரிப்டோ கரன்சி முதலீட்டுத்திட்டத்தில்பெருமளவிலான இலங்கையர்கள் சிக்கியுள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. சர்வதேச ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Sports Chain's இணையதளம் மற் றும் கையடக்க தொலைபேசி மென்பொருளில் முதலீடு செய்த முதலீட்டாளர்கள் நூறாயிரக்கணக்கான டொலர்களை இழந்துள்ளனர் என அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

இந்த இணையதளம் ஆங்கிலத்தில் பல இலக்கணப் பிழைகளைக் கொண்ட பிரமிட் திட்டம் என்று அந்த செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்த மோசடியில் ஈடுபட்டவர்கள் புதிய முதலீட்டாளர்களிடமிருந்து பணத்தைப் பெற்றுக்கொண்டு பழைய முதலீட்டாளர்களுக்கு பணம் செலுத்துவதாகவும் அவர் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த மோசடியில் ஈடுபட்டவர்கள் Sports Chain's இணையதளத்தை கிரிப்டோ முதலீட்டு முறை என்று அழைத்தாலும், Sports Chain's என்ற பெயரில் பதிவு செய்யப்பட்ட கிரிப்டோகரன்சி அல்லது சொத்து எதுவும் இல்லை என்று கூறப்படுகின்றது.

இந்த மோசடியில் 30 – 40 வயதுக்குட்பட்ட இலங்கையில் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த பெருமளவானோர் சிக்கியுள்ளனர் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. சிலர் தங்களுடைய சொத்துக்களை குடும்ப உறுப்பினர்களிடம் கூறாமல் விற்று பணத்தை அதில் முதலீடு செய்துள்ளனர்.

ஒருவர் தனது சொத்தை விற்று 22 லட்சம் ரூபாவை Sports Chain இல் முதலீடு செய்து வெறும் 2 லட்சம் ரூபாவை திரும்பப் பெற்றதாக அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற ரயிலில் மோதலில் ஈடுபட்டுள்ள நால்வர் கைது!

காங்கேசன்துறையில் இருந்து காலி நோக்கி பயணித்த மஹவ ரயிலில் மோதலில் ஈடுபட்ட நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காங்கசந்துறையிலிருந்து காலி நோக்கிச் செல்லும் ரயிலில் ஏறிய மூவர், ரயில் இருக்கை தொடர்பில் நபருடன் தகராறு செய்துள்ளனர்.

மேலும் குடிபோதையில் ரயிலுக்கு பாதிப்பை ஏற்படுத்தி மோதலில் ஈடுபட்டனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது ரயிலில் இருந்த மற்றொரு நபர் அவர்களைத் தாக்கினார். பின்னர், ரயில் பாதுகாப்பு அதிகாரிகள் அனைவரையும் கைது செய்து மஹவ பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 22, 26, 28 மற்றும் 57 வயதுடைய மஹவ மற்றும் கணேமுல்ல பிரதேசத்தை சேர்ந்தவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

மஹவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.08.2022இல் வெளியிடப்பெற்றது.


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழ்ப் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=